www.padippakam.com

ஈழ சுதந்திரன்

ELASUTANTIRAN



திருவள்ளுவராண்டு
உ0உஅ
மாசி-பங்குனி

புத்தகம்: 10 இதழ்: 4

மார்ச்-1997

∴ அதிகாரப்பரவல் திட்டம் ஒரு பக்கம்! அதிகார துஷ்பிரயோகம் மறுபக்கம்!

∴ தமிழ் மக்களைச் சமாதானமாக வாழவிடாமைதான் சமாதானத்துக்கான யுத்தமா?

∴ அயலக மக்களைப்பார்க்கிலும் அநியாயமாகத் தமிழர்களை நடத்திக் கொண்டு, இலங்கை ஒரே நாடு என்பதா?

# சந்திரிகாவின் இரட்டை வேடம்

# அம்பலம்

*சமாதானத்துக்கான யுத்தம் என்று சந்திரிகா சொல்வது தமிழ் மக்களைக் கிஞ்சிற்றும் சமாதானமாக வாழவிடாதிருப்பதுதான் என்பதும், அதிகாரப் பரவல் திட்டம் என்று ஒரு பக்கம் சொன்னாலும் உண்மையில் நடப்பது அதிகார துஷ்பிரயோகம்தான் என்பதும், "இலங்கை ஒரே நாடு; தமிழ் மக்களுக்கு இங்கு அனைத்து உரிமைகளும் உண்டு, தனி நாட்டைத் தவிர" என்று சொல்லிக் கொண்டே பகை நாட்டு மக்களைப்விடப் பத்து மடங்கு மோசமாக நடத்தப்படுகிறார்கள் என்பதும், அதாவது சந்திரிகாவின் இரட்டை வேடம் இப்போது உலகத்திறகு அம்பலமாகியுள்ளது.*

வவுனியா, சிறீலங்காவின் சிங்களப் பகுதிக்கு அருகில் உள்ள தமிழ் நகரம். தமிழ்ப் பகுதியான யாழ்குடா நாட்டிலிருந்து தென்னிலங்கை செல்வதற்காக இந்த நகரில் 9 ஆயிரம் தமிழ் மக்கள் கடவுச் சீட்டுக்காக 3 மாதங்கள் காத்துக் கிடக்கிறார்கள்.

ஆம்; இராணுவமும் காவல் துறையும் பரிசோதித்து 'பாஸ்' வழங்காவிட்டால் தமிழ்ப்பகுதியிலிருந்து தமிழ் மக்கள் யாரும் சிங்களப் பகுதிக்குள் நுழைய முடியாது.

அப்படியானால் தமிழ்ப் பகுதியும், சிங்களப் பகுதியும் இப்போதே இரு தனி நாடுகள் போலத்தான் நடைமுறையில் இருந்து வருகின்றன என்பதில் ஐயமென்ன ?

### பாஸ் முறை

எனினும் "இலங்கை ஒரே நாடு. தமிழ் மக்கள் அதைப் பிரிக்கப்பார்க்கிறார்கள். அதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். மற்றபடி அவர்களுக்கு இலங்கையில் அனைத்து உரிமைகளும் உண்டு" என்று சிறீலங்கா ஆட்சியினர் சொல்கிறார்கள்.

ஆனால், ஒரே நாட்டின் வடபகுதியிலிருந்து தென் பகுதிக்குப் போவதாயின் தமிழ் மக்களுக்கு மட்டும் அரசின் அனுமதிச்சீட்டு (பாஸ்) பெற வேண்டியதிருக்கிறது. சிங்கள மக்களுக்கு இந்தத் தொல்லையெல்லாம் கிடையாது.

இப்படிப்பட்ட இனவாதம் வேறு எந்த நாட்டிலேனும் உண்டா ?

உதாரணமாக இந்தியா 25க்கும் மேற்பட்ட மாநிலங்களைக் கொண்ட மாபெரும் தேசம். இங்கே ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குப் போக பாஸ்பெற வேண்டுமா?

### *இந்தியாவில் இந்நிலை உண்டா?*

காஷ்மீரிலிருந்துகன்னியாகுமரி வரை இந்தியர்கள் எந்த மொழி பேசுபவர்களாக இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நினைத்தவுடன் இந்தியாவுக்குள் எங்கும் தாராளமாகப் போய் வர முடியும்தானே?

சரி; இந்தியா ஒரு தீபகற்பம் அதனால் எந்தத் தடங்கலுமின்றி. இந்தியர்கள் இந்தியாவுக்குள் எங்கு வேண்டுமானாலும் போய் வர முடிகிறது என்று சொல்லக் கூடும்.

### *இந்தோனேசியாவில் உண்டா?*

இந்தோனேசியா 13 ஆயிரம் தீவுகளாகப் பரந்து கிடக்கும் நாடு. சில தீவுகளை எடுத்துக் கொண்டால் ஒரு தீவுக்கும் மற்றொரு தீவுக்கு மிடையே இரண்டாயிரம், மூவாயிரம் கல் தொலைவு கூட இருக்கிறது. ஆனால் இந்தோனேசியர்கள் அவர்கள் முஸ்லிம்களானாலும் இந்துக்களானாலும், பௌத்தர்களானாலும் அந் நாட்டில் எங்கு வேண்டுமானாலும் தாராளமாகப் போய் வர முடிகிறது.

ஆனால், இலங்கையில் மட்டும், தமிழர்களுக்கு மட்டும் நடமாட்டத் தடை இருக்கிறது என்றால், அவர்களைச் சிறீலங்கா அரசாங்கம் இலங்கையர்களாக நடத்தவில்லை என்பது தானே பொருள் ?

சிங்களப் பகுதிக்குப் போவதற்கு இந்த 'பாஸ்' முறையென்றால், தமிழ்ப் பகுதியிலேயே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போவதென்றாலும் இது போன்ற கெடுபிடிகளும், காத்துக் கிடக்க வேண்டிய கஷ்டங்களும் தமிழ் மக்களுக்கு இருக்கின்றன.

உதாரணமாக திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கோ யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கோ போகவேண்டுமானால் பல வாரங்கள் காத்திருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

### கதைகதையாக கஷ்டங்கள்

இந்தக் கட்டாயம் சாதாரணத் தமிழ்ப்பொது மக்களுக்கு மட்டுமல்ல. தமிழ் அரச அதிகாரிகளுக்கும் இருக்கிறது.

யாழ்ப்பாணத்திற்கு வருவதற்காக திருகோண மலையிலே அதிகாரிகள் உட்படத் தமிழ் மக்கள் தங்க இடமின்றி, வீதிகளிலும், மரத்தடிகளிலும், பனியிலும், வெயிலிலும் பல வாரங்களாகக் காத்துக் கிடப்பதை அங்கிருந்து வரும் செய்திகள் கதைகதையாகக் கூறுகின்றன.

### *எல்லையில்லாத தொல்லைகள்*

இப்படி வவுனியாவிலும், திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் அங்குமிங்கும் போவதற்காக வேண்டிக் காத்துக் கிடக்கும் தமிழ் மக்கள் மத்தியில் தொத்து நோய்கள் பரவி துன்பத் துயரத்திற்கு ஆளாக்கும் கொடுமையும் கூடி வருகிறது.

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பிலோ, தமிழ் மக்கள் சந்திக்கும் சிக்கல்களுக்கும், அனுபவிக்கும் தொல்லைகளுக்கும் எல்லையே கிடையாது.

இலங்கை உச்ச நீதி மன்றத் தீர்ப்பே இதற்குச் சான்றாகும்.

### *உச்சநீதிமன்றத் தீர்ப்பு*

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா நிர்வாகம் மேற்கொண்டு வரும் சட்ட விரோதமான கைதுகள் மற்றும் தாக்குதல்களை. உச்சநீதிமன்றத்தில் நீதிபதி A.R.B. அமரசிங்கே கொடுத்துள்ள ஒரு தீர்ப்பில் வன்மையாகக் கண்டனம் செய்துள்ளார். யாழ்ப்பாணத் தமிழ் இளைஞரான விஜயன் விமலேந்திரன் சட்டத்துக்குப் புறப்பாகக் கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் காவலில் வைக்கப் பட்டிருந்ததைக் கண்டித்து, அவருக்கு ரூ 25,000 இழப்பீடாக வழங்க வேண்டும் என்று கடந்த 20 டிசம்பர் 1996 அன்று அளித்த தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை தமிழர் பிரச்னை: இந்தியா உதவும் நிலை விரைவில் தோன்றும்

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக சுமுகமான ஒரு சூழ்நிலை உருவாவதற்கு இந்தியா உதவும் நிலை விரைவில் தோன்றும் என தமிழீழ விடுதலை இயக்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா இனிமேல் எவ்வித தலையிடும் செய்யாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தர் குமார் குஜ்ரால் தனது இலங்கை விஜயத்தின் போது அறிவித்தமை தொடர்பாக கருத்து தெரிவித்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முதல்வர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது;

ஆரம்பத்தில் எமது விவகாரம் குறித்து அமைச்சர் குஜ்ராலுக்கு வேறுவிதமான அபிப்பிராயம் இருந்திருக்கலாம். ஆனால் எம்முடனான பேச்சுவார்த்தையின் பின்னர் அவரது நிலைப்பாட்டில் நிச்சயம் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்பதை நாம்நம்புகிறோம்

இலங்கை தமிழ் மக்கள் விவகாரம் தொடர்பாக இந்தியாவுக்கு உள்ள கடப்பாட்டை அவருடனான எமது பேச்சுவார்த்தையின் போது நாம் தெளிவாக வலியுறுத்தியுள்ளோம். அதுமட்டுமன்றி இலங்கை விவகாரத்தில் தலையீடு இல்லை என்ற பதிலை அவரிடம் இருந்து பெற நாம் தயாராக இல்லை என்றும் எமது விடயத்தில் தலையிட இந்தியா சம்மதிக்கும் வரை நாம் அதனை வலியுறுத்திக் கொண்டே இருப்போம் என்றும் அவரிடம் கூறியுள்ளோம்.

தனது அறிவித்தல்களில் தலையீட்டை அவர் மறுத்த போது மனிதநேய அடிப்படையிலான உதவிகளுக்கு மறுப்பு தெரிவிக்கவில்லை.

ஆயினும் இந்த விடயத்தை இத்துடன் விட்டு விடாது எமது விடயத்தில் இந்தியாவை தலையிட சம்மதிக்க செய்யும் வகையில் அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து உண்மையுடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

''பெரியவர் தம்நோய்போல் பிறர்நோய் கண்டுஉள்ளம்
எரியின் விழுதுஆவர் என்க – தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக்
கண்டு கலுழுமே கண்''—'நன்னெறி'

உடம்பில் எந்த உறுப்பில் நோய்தோன்றி வருத்தினும் கண் அழும். அது போல பெரியவர்கள் பிறருக்கு வந்த துன்பத்தைக் கண்டு, அதனைத் தமக்கு வந்த துன்பமாகக் கருதி, நெருப்பிலே பட்ட நெய்போல உருகுவர். தெரியிழாய் - ஆராய்ந்து எடுத்த அணிகலன்களை அணிந்தவளே. (ஒரு பெண்ணிடம் கூறுவதுபோல இப்பாடல் அமைந்துள்ளது.)

# தெளிவு

## தொய்வு நிலை அகன்று துலங்கட்டும் நல்லாதரவு!

தமிழர் பிரச்சினையில் இலங்கையிலேதான் பாதக நிலை நிலவுகிறது எனில், இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் சாதகமற்ற சூழ்நிலை நிலவுவது வேதனையைத் தருகிறது.

''அழுதும் பிள்ளை அவள்தான் பெறவேண்டும்'' என்பதைப்போல ஈழத்தமிழினம் தனது உரிமையைத் தான் தான் பெற்றெடுக்கவேண்டும்.

ஆனால் இந்தியாவில், குறிப்பாகத்தமிழ்நாட்டில் அவர்களுக்கு ஆதரவோ. அவர்கள்பால் அனுதாபமோ இல்லை என்கிற நிலை ஏற்படுவதோ, அல்லது உண்மையான ஆதரவிருந்தும் அது இல்லை என்பதுபோன்ற தோற்றம் உலகத்தின் கண்களுக்குப் படுமாறு இடம்கொடுப்பதோ முழுத்தமிழினத்தின் நலன்களுக்குமே முரண்பட்டதாகும். ஏனெனில், உலகத்தில் வாழும் ஒன்பதுகோடித் தமிழ் பேசும் மக்களில் இலங்கையில் வாழும் இஸ்லாமியத் தமிழர்கள். மலையகத் தமிழர்கள், ஏனை வடகிழக்குத் தமிழர்கள் அத்தனை பேரையும் கூட்டிப்பார்த்தாலும் அரைக்கோடிக்குச் சற்று அதிகம் என்ற அளவுக்கே சொல்ல முடியும்.

மலேசியா, சிங்கப்பூர் முதலிய ஏனைய கடல் கடந்த நாடுகளில் வாழும் மொத்தத் தமிழர்களையும் கூட்டிப்பார்த்தாலும் ஒரு கோடிக்குமேல் போகாது.

மீதி ஏழரைக்கோடித் தமிழ்பேசும் மக்களுக்கும் இந்தியாவில் வாழ்பவர்களே. அதிலும் குறிப்பாக ஆறரைக் கோடிக்கும் அதிகமானபேர் வாழ்வது தமிழ்நாட்டிலே தான்.

அப்படியிருக்க, தமிழ்பேசும் மக்களுக்கு உலகத்தின் எந்த மூலையில் ஒரு இளப்பம் என்றாலும், அது உலகத் தமிழினம் முழுவதற்குமே ஊனம் ஏற்படுத்துவதாகும்; ஆயினும் தமிழகத்திற்கே மிகுந்த தலையிறக்கத்தை உண்டாக்குவதாகும்.

காரணம், உலகத் தமிழினத்தின் அடிமரமும் ஆணிவேரும் தமிழகத்திலேதான் உள்ளது. அதனால் கிளைகளுக்கு ஒரு கேடு என்றாலும், விழுதுகளுக்கு ஒரு வில்லங்கமென்றாலும் அதன் தாக்கம் அடிமரத்தையும் பாதிக்காமல் இருக்க முடியாது.

ஆகவே, தமிழ்பேசும் இனத்தின் அடிமரமாக இருக்கின்ற தமிழ்நாடு, அதனால் துலங்கி : கொண்டிருக்கும் சோலையான இந்தியா இலங்கை:யில் உயிர்வாழவே போராடிக் கொண்டிருக்கும் தமிழினத்தின் ஊறு துடைக்க வீறுடன் புடைத்தெழ வேண்டியது இன்றியமையாததாகும்.

விடுதலைப் புலிகளைச் சாக்கிட்டோ, வேறு எதைச் சாட்டியோ ஈழத்தமிழினத்திற்கு உதவிசெய்ய வேண்டியதை உதாசீனப்படுத்திவிடக்கூடக்கூடாது. அப்படி உதாசீனம் காட்டுவது ஈழத்தமிழினத்திற்கு மட்டுமின்றி, உலகம் முழுவதும் பரவியிருக்கின்ற இந்திய வம்சாவளியினரை - அவர்கள் எந்தமொழியை. எந்த மதத்தைச் சார்ந்தவர்களானாலும் பாதிக்கவே செய்யும் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஏனென்றால், ''இந்தியா இலங்கையில் தன் வம்சாவளியினரான தமிழர்களை - இந்திய மாநிலமான தமிழ்நாட்டில் வாழும் மக்களின் சகோதரர்களைக் கண்டுகொள்ளவில்லை; அதனால் உலகத்தில் எப்பகுதியில் வாழும் இந்திய வம்சாவளியினர்க்கு எக்கேடு செய்தாலும் அது கண்டுகொள்ளாது'' என்ற எண்ணம் உலகநாடுகளில் ஏற்பட்டு, இன்று இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதி மற்ற நாடுகளில் உள்ள இந்திய வம்சாவளியினர்க்கும் இழைக்கப்படலாம்.

இலங்கையில் இந்தியா காட்டிய பாராமுகம்தான் ஏற்கனவே பீஜியில் இந்திய வம்சாவளியினர்க்கு அநீதி இழைக்கப்பட தைரியத்தைக் கொடுத்தது என்பதையும் மறந்து விடக் கூடாது.

எனவே, இந்திய அரசும் தமிழக அரசும் ஏற்கனவே பாகிஸ்தானோடும், சீனாவோடும் உறவாடி இந்தியாவுக்கு நெருக்கடியான நேரத்தில் நெருக்கடி கொடுத்த சிங்களப் பேரினவாத சிறீலங்காவுக்கு மேலும் இடம் கொடுத்து விடாமல் இலங்கைத் தமிழ் மக்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவில் தற்போதுள்ள தொய்வு நிலையை அகற்றி நல்லாதரவைத் துலங்கச் செய்ய வேண்டுமென்று அறிஞர்களையும், பத்திரிகையாளர்களையும், கட்சிகள், சங்கங்கள், அமைப்புகளின் தலைவர்களையும் இருகரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

''உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

-திருக்குறள் 788

# சந்திரிகாவின் இரட்டைவேடம் அம்பலம்

(முதல் பக்க தொடர்ச்சி)

அவசர காலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் படையினருக்கு யாரையும் கைது செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது இது பற்றி நீதி மன்றம் குறிப்பிடுகையில் ஒருவரைக் கைது செய்யும் ஆணையில் கையெழுத்திடுவதற்கு முன்னால் பாதுகாப்புச் செயலாளர் அதற்குச் சந்தேகமற்ற சாட்சியம் உண்டா என்று பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது.

### சிறைக் கொடுமை

தேசியப் பாதுகாப்புக்குக் குந்தகமிருந்தாலொழிய அவசர கால நடைமுறைச் சட்டம் 17 (i)ன்படி ஒருவரைக் கைது செய்யக்கூடாது. ஆனால் அதற்கு மாறாக 900 பேர்களை சிறைகளிலும், காவல் நிலையங்களிலும் அடைத்து வைத்துள்ளதாக மனித உரிமைகள் பணிக்குழு (HRTF) புகார் கூறியிருக்கிறது.

சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காக என்று கூறிக் கொண்டு வடக்கு கிழக்கைச் சேர்ந்த 60 பேர்களை அவசர கால நடைமுறையின் கீழ் மற்றும் பயங்கவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, நீதி மன்றத்தின் முன் கூட்டிச் செல்லாமலே 18 மாதங்களுக்கு மேல் சிறைகளில் வைத்திருப்பதாக மனித உரிமை அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளன.

### விடுதலை ஆணைக்குப்பின்பும் சிறை வாசம்

கொழும்பு உள்ளிட்ட தென்பகுதிகளில் அவசர காலை நடைமுறைச் சட்டத்தின் கீழும் சரி; பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் கீழும்சரி சந்தேகத்துக்குரியோரை (சிங்களவராயின்) மாஜிஸ்திரேட் உத்தரவின்கீழ் ஏழுநாட்களே சிறையில் அடைக்கின்றனர். தமிழராயின் நடைமுறையே மாறுபடுகிறது. கழுத்துறையில் கைது செய்யப்பட்ட 23 தமிழர்கள் 3 ஆண்டுகளுக்கு மேல் சட்டவிரோதமாகத் தடுத் துவைக்கப்பட்டிருந்து, அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டும் கடந்த சனவரி 19ம் திகதிவரை விடுதலை செய்யப்படவில்லை என்றும் மனிதவுரிமை அமைப்பு எடுத்துக்காட்டியுள்ளது.

மட்டக்களப்பு சிறைக் கண்காணிப்பாளரான A.ஸ்காந்தராஜா, உயர்நீதி மன்றம் மற்றும் மாஜிஸ்டிரேட் உத்தரவுப்படி விடுவிக்கப்படுகிற கைதிகளை உடன் சிறையிலடைக்கும்படி பாதுகாப்பு அமைச்சிலிருந்து ஆணை பிறப்பிக்கப்படுவதால் சிறை அதிகாரிகள் மிகுந்த சோதனைக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருப்பதாய்க் கூறியுள்ளார். இதனால் ஏராளமான தமிழ் இளைஞர்கள், விடுதலை ஆணைகளுக்குப் பிறகும் தொடர்ந்து சிறையில் இருந்து வருகின்றனர் என்றார்.

### ராணுவக்காவலில் சாவுகள்

வடக்கிலிருந்து கொழும்புக்கு வந்துள்ள 1,50,000 அகதிகளில் புலிப்படையினரும் அநேகர் கொழும்பில் ஒளிந்திருப்பதாக காவல்துறையினர் சந்தேகிக்கின்றனர். கடந்த இரண்டு மாதங்களில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் விளைவாக தலைநகரில் ஏராளமான தமிழர்களைக் கைது செய்திருப்பதாகப் போலீசார் கூறியுள்ளனர். கடந்த டிசம்பரில் புலி என்று சந்தேகிக்கப்படும் தம்பிப்பிள்ளை ஞானசேகரம் நகரில் கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருப்பதாக போலீசின் முன் அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

இராணுவக்காவலில் சாவுகள் மீண்டும் கூடி வருவதாக கொழும்பில் பீதி அதிகரித்து வருகிறது. மகாதேவா எனும் ஓய்வுபெற்ற தமிழ்ப்பொறியாளர் ஒருவரை இராணுவத்தினர் வெள்ளை வேனில் டிசம்பர் 25ம் திகதி அவருடைய வீட்டிலிருந்து அழைத்துச் சென்றனர் என்றும் இன்னும் வீடு திரும்பவில்லை என்றும் அவருடைய உறவினர்கள் மனிதவுரிமைக் குழுவிடம் HRTF) புகார் செய்துள்ளனர்.

மனிதவுரிமைக் குழுவால் இது போன்று 18 காணாமல் போனவர்களில் அக்டோபர் மாதம் 6 பேரைப் பற்றி மட்டுமே விபரம் அறிய முடிந்திருக்கிறது: அதனால் உள்ளூர் அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் மனிதவுரிமைக் குழுவின் செயல்பாடு திருப்தியளிப்பதல்ல என்றும், கைது உத்தரவுகளின் கீழ் சிறை வைக்கப்படுபவர்கள் பற்றி 48 மணி நேரத்திற்குள் மனிதவுரிமைக் குழுவிற்கு அறிக்கை கொடுக்க வேண்டும் என்று விதியிருந்தும் அதைக் கடைப்பிடிப்பதில் பாதுகாப்புப் படையினரும், மனிதவுரிதைக் குழுவினரும் தோல்வியையே கண்டுள்ளனர் என்று புகார் கூறியுள்ளனர்.

### தோல்வி

ஆக இலங்கையில் தமிழ் மக்களுக்குத் தமிழ்ப்பகுதியிலும் சமாதானமில்லை. சிங்களப் பகுதியிலும் சமாதானமில்லை. இதை நீடித்து தமிழ் மக்களை முற்றாகச் சாகடிப்பதைத்தான் சமாதானத்திற்கான யுத்தம் என்று சந்திரிகா வர்ணிக்கிறார் போலும்.

இல்லையென்றால், ஒரு சிங்களவரான குமார் ரூபசிங்கே அவர்களைச் செயலாளர் நாயகமாகக் கொண்டதும் லண்டனைப் தலைமையகமாகக் கொண்டு இயங்குவதுமான அரசுசாராப் பன்னாட்டு அமைதிக்கான விழிப்புணர்வு அமைப்பு. இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காகப் பெரும்பாடுபட்டும் முடியாமல் தோல்வியுடன் திரும்பியிருக்கமாட்டாது.

எனவே, சமாதானத்திற்காக யுத்தம் என்ற சந்திரிகாவின் பேச்சு அவருடைய இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது.

## மட்டக்களப்பில் 3 நகைக்கடைகள் தரைமட்டம்

மட்டக்களப்பு நகரில் பிரதான வீதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டவிதிகளின் கீழ் கட்டிட வரைபட அனுமதியைபெறாது நிர்மாணித்த மூன்று நகைக் கடைகளை மாநகரசபை அதிகாரிகள் இடித்து தரைமட்டமாக்கினர்.

பொலீஸ் பாதுகாப்புடன் கடைகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. பிரதானவீதி போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டு பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு முனைவீதியில் முன் அனுமதியின்றி இயங்கிவரும் மோட்டார் வாகன திருத்துமிடம் சிகை அலங்கரிப்பு நிலையம் முதலியனவும் இடிக்கப்படவிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்களைக் கொன்று குவித்த இனவாதக்கட்சி யு.என்.பி. தான்

## பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் சந்திரிகா தாக்கு

இலங்கை ஆட்சி பீடந்தில் மூன்றாவது ஆண்டை ஆரம்பித்து இருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க அரசாங்கம் இலங்கையில் நடைபெற்று வரும் இன நெருக்கடியைத் தீர்த்து வைக்கும் கொள்கையை இப்போது வலியுறுத்தி வந்து இருக்கின்றது புலிப்படை போராளிகள் நாட்டை மீண்டும் போர்ப் பாதையில் இழுத்துச் சென்று இருக்கின்றார்கள். இதற்கான காரணங்களை அவர்கள் ஒரு போதுமே வெளிப்படுத்தியது கிடையாது என்று எமது பி.பி.சி நிறுவனத்திற்கு வழங்கிய செய்தியில் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தமது அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து எட்டு மாத காலம் சண்டை நிறுத்தம் கடைபிடித்த பின்னர் இப்படி நடந்தது என்று அவர் தெரிவித்தார். போராளிகளின் ஒத்துழைப்புடனோ அல்லது அது இல்லாமலோ அரசியல் சீர்திருத்தத் திட்டம் ஒன்று இப்போது அறிமுகம் செய்யப்படுகிறது அதிகரித்த சுயாட்சி கோரி வரும் தமிழ் மக்களின் தேவைகளைக் கவனிப்பதன் மூலம் இந்த சீர்திருத்தங்கள் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார் அரசியல் சாசனத்தைமாற்றி அமைக்க, பெரும்பான்மை ஆதரவைத் திரட்டுவதும், புலிப்படையிணை அரசியல் ரீதியாக ஒதுக்கி வைப்பதுமே இந்த அரசியல் சீர்திருத்தத்தின் நோக்கமாகும்.

### கட்சி அரசியல்

அதே சமயத்தில் இலங்கை அரசின் படைகள் நடத்தி வரும் ராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் நடத்தப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். ஏற்கனவே வட மாநிலத்தில் முக்கால் பங்கிற்கு மேற்பட்ட பகுதி முன்னால் புலிப்படையின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதி இப்போது மீண்டும் கைப்பற்றப் பட்டிருக்கிறது. மக்கள் வாழும் எந்தப் பகுதி மீதும் கட்டுப்பாடுஇல்லாத சின்னஞ் சிறிய இயக்கமாகப் புலிப்படையினர் விரைவில் குறைக்கப்பட்டு விடுவார்கள். போரின் இரு தரப்பினருக்கும் இடையிலான நிலைப்பாடே இதனால் மாற்றப்பட்டு விடும் என்றும் ஜனாதிபதி குமாரதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தமிழ் மற்றும் முஸ்லீம் சிறுபான்மைக் குழு உட்பட 1 கட்சிகளின் ஆதரவு தனக்கு இருப்பதாகவும் . எதிர்க்கட்சியான (யு.என்.பி ) ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெறுவதுதான் முக்கியமான பிரச்சிவையாக இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, ஐக்கிய தேசியக் கட்சியினர் கட்சி அரசியலை ஒரு புறம் தள்ளி வைத்துவிட்டு, நாட்டின் நன்மையை மனதில் நிறுத்திச் செயல் ஆற்றுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

பி.பி.சி. தொலைக் காட்சிக்கு இலங்கை அதிபர் அளித்த செவ்வியி மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் அரசியல் தீர்வு காணும் விசயத்தில் பெரும் அளவுக்கு முன்னேறி உள்ளதாகவே நினைக்கிறேன் என்றார்

### தமிழ்-முஸ்லிம் கட்சிகள்

1½ ஆண்டுக்கு முன்னதாக அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை முன் வைத்தும் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் இணக்கத்தையும் பெற்று நாடாளுமன்றத்தில் உள்ள 11 கட்சிகளில் யு.என்.பி. கட்சியைத் தவிர அனைத்துக் கட்சிகளின் இணக்கத்தையும் பெற்றுள்ளோம் என்றார்.

எதிர்க்கட்சி வரிசையில் யு என்.பி. கட்சி ஒன்று தான் இதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. இன வெறி பிடித்த அக்கட்சி ஆட்சியில் இருந்த போது தமிழ் மக்களைத் தாக்கவும், கொல்லவும், அவர்களின் வீடுகளையும் வளங்களையும் கொளுத்தவும், அவர்கள் சொத்துக்களை எரியூட்டவும் அமைப்பு ரீதியில் செயல்படும் கொள்ளைக்காரர்களையே அனுப்பி, அதன் மூலம் போர் மூளச் செய்த அந்தக் கட்சியின் சம்மதத்தை மிக குறுகிய காலமாகப் 15 அல்லது 10 மாதங்களில் பெறுவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அன்று என்று ஆதங்கத்தோடு குறிப்பிட்டார் ஜனாதிபதி சந்திரிகா.

# கிரேக்கம் திருப்பியனுப்பிய 29 பேர் விசாரணைக்கு சி.ஐ.டி.யிடம் ஒப்படைப்பு

வடக்கில் வாழ வழியில்லை என்று தெற்கே கொழும்புக்கு வந்தால் பயபீதியின்றி வாழ இடமில்லை எனவேதான் கண்காணாத ஒரு நாட்டிலாவது போய் ஒதுங்கி வாழ நினைத்தோம் ஆனால் அதுவும் கைகூடவில்லை.

ஐந்து, ஆறு வாரங்கள் நாங்கள் நடுக்கடலில் அனுபவித்த துன்ப துயரங்கள் எம் வாழ்நாளிலேயே மறக்க முடியாதவை. நாம் உயிர் பிழைத்து இங்குவந்ததே தெய்வச் செயல்தான்

இவ்வாறு கிரேக்க கப்பல் விபத்தில் தப்பிய நிலையில் கிரேக்க பொலீஸாரால் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டு விமான மூலம் கொழும்பு வந்து சேர்ந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பர் 25-ஆம் திகதி கிரேக்கத்திற்கும் இத்தாலிக்குமிடையேயுள்ள மோல்டா தீவுகளுக்கு அருகில் இடம்பெற்ற கப்பல் விபத்தில் உயிர்தப்பிய இவர்கள் டிசம்பர் 31-ஆம் திகதி கிரேக்க பொலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

ஏதென்ஸ் நகரில் இருந்து பாகிஸ்தான் எயார் லைன் விமானம் மூலம் புறப்பட்டு பாக். தலைநகர் கராச்சியை அடைந்த இவர்கள் அங்கிருந்து பாகிஸ்தான் எயார் நிறுவனத்துக்கு சொந்தமான பி.கே. 0776 இலக்க விமானம் மூலம் புறப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். கிரேக்க பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட 51 பேரில் 29 பேர் மாத்திரமே கொழும்பு வந்தடைந்தனர்.

மீதமுள்ள 22 பேரும் சில தினங்களில் நாடு திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்காலிக கடவுப்பத்திரங்களுடன் இலங்கை வந்து சேர்ந்த இவர்களிடம் விமான நிலைய குடிவரவு அதிகாரிகள் வழமையான விசாரணைகளை முடித்துக் கொண்டு அவர்களை சி.ஐ.டி. பொலீஸாரின் இன்டர்போல் பிரிவினரிடம் கையளித்தனர்.

சி.ஐ.டி. பொலீஸாரின் இன்டர்போல் பிரிவை சேர்ந்த சிரேஷ்ட பொலீஸ் குழு மேலதிக விசாரணைக்காக இவர்களை பொலீஸ் பஸ் ஒன்றில் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்து சென்றனர். நாடுதிரும்பிய இவர்களை தடுப்பு முகாமுக்கு அழைத்து செல்வது பற்றி கருத்து தெரிவித்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சர் மித்ரா சிறிவர்தன கூறியதாவது:

இவர்கள் குற்றவாளிகள் அல்ல. பாதிக்கப்பட்டவர்கள் ஆனால் குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை பெறுமுகமாகவே இவர்களை தடுப்பு முகாமுக்கு அழைத்து செல்கின்றோம். விசாரணையின் பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

இது வரையிலான விசாரணைகளின்படி இவர்களில் சிலர் 8000 அமெரிக்கா டொலர்களை பிரயாண முகவர்களுக்கு கொடுத்தே இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

அத்துடன் இந்த சம்பவத்தில் பல போலி பயண முகவர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இன்ஸ்பெக்டர் பாலித ரத்னதிலக, கான்ஸ்டபிள்களான யூ.ஏ.சி. சோமதிலக மற்றும் டபிள்யூ கே. ஜயசேன ஆகியோரும் இந்த ரகசிய பொலீஸ் குழுவில் அடங்கியிருந்தனர்.

நாடு திரும்பிய இந்த இளைஞர்களை வரவேற்குமுகமாக அவர்களது நெருங்கிய உறவினர்கள் பலர் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். தமது மகனை சகோதரனை கண்டதும் பலர் கட்டியணைத்து அழுது புலம்பினர்.

# வன்னி மாணவருக்கு சீருடையும் போதிய உணவும் இல்லை

## வகுப்புகளில் தினமும் பலர் மயங்கி விழும் அபாயம்

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னி பகுதியில் இலவச சீருடை கிடைக்காததாலும் உரிய வேளையில் இலவசப் பாடப் புத்தகங்கள் கிடைக்காததனாலும் பெருந்தொகையான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச அதிகாரிகளும் கல்வித்திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகளும் கல்வித்திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகளும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களினதும் இராணுவ பாதுகாப்பு அதிகாரிகளினதும் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

வவுனியா செயலகத்தில் நடைபெற்ற வன்னிப் பிரதேச கல்விநிலைமை தொடர்பான முக்கிய கூட்டத்தில் இவ்விடயம் குறித்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களாகிய த. சித்தார்த்தன், எஸ். சண்முகநாதன், பாலச்சந்திரன் ஆகியோரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

### அரச அதிபர்கள் கூட்டுக்கூட்டம்

கிளிநொச்சி அரச அதிபர் எஸ்.தில்லை நடராஜா, முல்லைத்தீவு அரச அதிபர் ஆர். தர்மகுலசிங்கம், மன்னார் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜி ஜேக்கப் ஆகியோர் தமது பிரதேச கல்வி நிலைமையின் அவலங்கள் குறிந்து விரிவாக எடுத்துக் கூறினர்.

கடந்த 1996-ஆம் ஆண்டுக்குரிய இலவச பாடசாலை சீருடை இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்கு வழங்கப்படவில்லை.

இந்த வருடத்திற்குரிய சீருடைத்துணியும் கிடைக்குமா என்பது தெரியவில்லை

### போஷாக்கின்மையால் மாணவர்கள் பாதிப்பு

சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் வன்னிப்பகுதியில் பாடசாலைக்குச் செல்கின்ற போதிலும் பலர் சீருடை இல்லாத காரணத்தினால் வர்ண உடைகளிலேயே செல்கின்றனர். இன்னும் பெருமளவு மாணவமாணவிகள் சீருடை இல்லாத காரணத்தினால் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கின்றார்கள் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

நிவாரண உலர் உணவு உதவிகள் பெறாத குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தொழில் வாய்ப்பு இன்றி உள்ளவர்களும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் காலை உணவு உண்ணாமலும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்கின்றார்கள்.

### வசதியின்மையால் கல்வி தவிர்க்கும் நிலை

இவ்வாறு வருபவர்கள் பலர் நாளாந்தம் வகுப்புகளில் மயங்கி வீழ்வதாக கிளிநொச்சி அரச அதிபர் இக் கூட்டத்தில் தெரிவித்தார். தினசரி 20 தொடக்கம் 40 பேர் வரை பாடசாலைகளில் மயங்கி வீழ்வதனால் அவர்களைப் பராமரித்து வீடுகளுக்குக் கூட்டிச் செல்வதற்கு இதே அளவு மாணவர்கள் உதவி புரிய வேண்டியுள்ளது. இந்த நிலைமையினால் சுமார் 40 மாணவர்களது கல்வி பாதிக்கப்பட்டுவதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மாணவர்கள் பலர் வன்னி பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்கின்ற போதிலும், ஆயிரக்கணக்கான மாணவர்கள் பல்வேறு வசதியீனங்கள் காரணமாக பாடசாலைகளுக்குச் செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# மடல் வழிச் செய்திகள்

-ஆர். ஆர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மணியம் என்பவர் சென்னையில் உள்ள ஒருவருக்கு எழுதிய கடிதம்.

உங்களுடைய பழைய படங்களையும் பார்ப்போம் பழைய ஞாபகங்கள் வரும். அந்த ஞாபகத்திலேயே வாழ்கிறோம். இங்கு நிம்மதியாக சந்தோஷமாக இருக்க முடியாது. வேலைக்கு போய்வர வீதித்தடைகள், இராணுவச் சோதனைகள் எல்லாம் தாண்ட வேணும். உடைந்த வீடுகளும், முறிந்த தென்னைகளும்தான் பல உண்டு ஒரு நிவாரணமும் இன்னும் தரவில்லை. எனக்கு இந்தியா வரத்தான் விருப்பம் எல்லாம் ஆண்டவன் விட்ட வழி

இக்கடிதம்-30-1-97 வந்தது.

## யாழ்-வலிகாமத்திலிருந்து ஒரு கடிதம்: கைதுகள் தொடர்ந்தால் நிம்மதி எப்போது?

வலிகாமத்தில் மீளக் குடியேறி பத்து மாதங்களாகின்றன. இன்னும் தான் இங்குள்ள மக்கள் இராணுவ அத்துமீறல்களுக்கு ஆளாகி வருகிறார்கள். எங்கும் எதிலும் இராணுவம்தான். அன்று போடப்பட்ட சென்றிகள் இன்றும் தொடர்கின்றன சோதனைகள், வேதனை தரும் பேச்சுக்கள், சுதந்திரமாக விரும்பிய நேரம் விரும்பிய இடத்திற்குச் செல்ல முடியாத நிலை

வலிகாமம் வரும் மக்களுக்கு பூரண பாதுகாப்பு என்றும், மன்னிப்பென்றும் பன்னிப்பன்னி இராணுவம் களம் வகுத்த போது ஒலிபெருக்கி மூலம் ஒலி பரப்பியது.

இங்கு விடுதலைப் புலிகளின் மாவீரர், போராளி குடும்பத்தினர் வந்திருக்க மாட்டார்கள். அவர்கள் வன்னியிலேயே குடியேறி விட்டனர். ஆனால் புலிகள் இயக்க உறுப்பினர்கள் வலிகாமத்தில் நாம் மீளக்குடியமர வந்த போதே இருந்திருக்கிறார்கள்.

பத்தாண்டுகளோ, ஐந்தாண்டுகளோ, முன்னர் புலிகளுக்கு உதவியோர் இன்றும் விசாரிக்கப்படுகிறார்கள்.

புலிகளுடன் நெருக்கமில்லாதோரும் சில பிழையான தகவல்களினால் கைது செய்யப்பட்டுள்ளனர் பின்னர் விடுதலையாயினர். ஆனால் முதலில் 'நல்ல சாப்பாடு'.

சந்தேகிப்பவர்களை இராணுவம் விசாரிக்க வேண்டும்- அதில் பிரச்சனை எதுவும் இல்லை. அப்படி விசாரிப்பவர்கள் தக்க ஆதாரங்களைப் பெற்ற பின்னரே நடவடிக்கையில் இறங்க வேண்டும். அப்படி எதுவுமே இங்கு நடப்பதில்லை.

ஒருவரை விசாரிப்பதனால் அவரை பகலில் அழைத்து விசாரிக்கலாம். ஆனால் இங்கு நடப்பதென்ன? நட்ட நடு நிசியில், உறங்கும் நேரம் கதவைத் தட்டி எழுப்பி முகாமுக்குக் கொண்டு செல்கிறார்கள் இது அவசியம் தானா? சமாதானத்தை நிலைநாட்ட வந்த இராணுவத்தினர்தானா இவர்கள்?

ஒரு நாள் இரவு 9 மணி; அடைமழை; குளிரின் காரணமாக நித்திரைக்குச் சென்று விட்டோம் கதவு தட்டும் சத்தம் கேட்டது யாரெனக் கேட்டேன். முதலில் இயக்கம் என்றார்கள். ''யாராயினும் கதவு திறக்க மாட்டேன். காலை வாருங்கள்!'' என்றேன். அதன் பின்னர் ''ஆமி திறவுங்கள்!'' என்றார்கள். அப்போது வீட்டில் நானும், மனைவியும் எனது 24 வயது மகளும் தானிருந்தோம்.

மகள் ''அப்பா கதவைத் திறவாதையுங்கோ,'' என அழுதாள். மனைவியாரும் பயந்து அழுதாள். ''கதவை உடைக்கப் போகிறோம் திறவுங்கள்'' என பல தடவை கூறிய பின்னர், நடப்பது நடக்கட்டுமென மனைவியையும் மகளையும் ஓரறையில் விட்டு விட்டு கதவைத் திறந்தேன்.

''உங்களுக்குத் தெரிந்த விடுதலைப் புலிகளைச் சொல்லுங்கள்!'' என்றார்கள், ''இங்கிருந்தவர்கள் வன்னி சென்று விட்டார்கள்'' என்றேன். ''உங்களுக்கும் அவர்களுக்கு முள்ள தொடர்பு என்ன?'' என்று கேட்டார்கள். அதனையும் விபரமாகச் சொன்னேன். பலவித பயமுறுத்தல்களைச் செய்தார்கள். எனக்கும் அவர்களுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று திட்டவட்டமாகக் கூறினேன். பலரது பெயரைச் சொன்னார்கள். அவர்களை எனக்குத் தெரியாது என்றேன். இத்தனைக்கும் நாம் இடம் பெயர்ந்து தென்மராட்சி போகுமுன் நடந்த சம்பவங்கவளயே கேட்டார்கள். எல்லாரிடமும் துப்பாக்கி இருந்தது.

அதன் பின்னர், சுமார் ஒரு மணிநேர விசாரணையின் பின்னர், நாம் இங்கு வந்ததையோ உங்களை விசாரித்ததையோ எவருக்கும் சொல்லக் கூடாதென்ற கடும் எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றனர். எனக்கும், எனது மனைவிக்கும், மகளுக்கும் அன்றிரவு நித்திரையில்லை. தொடர்ந்து பல நாட்கள் மனவேதனை துடயுத்துடிடம்னும் இருந்தோம். இப்பயே அடிக்கடி வந்து விசாரித்துப் போவதால் வலிகாமம் வந்ததைப் பற்றி அதிகம் விசனப்படுகிறேன்.

13-1-97 காலை ஆனைக்கோட்டைப் பகுதியில் துப்பாக்கி வேட்டுகள் கேட்டன். எவருக்கும் எதுவித காயமுமில்லை.

உடனடியாகவே இராணுவம் வந்து சுற்றி வளைத்து தெருவில் போனவர்கள்ளையும் வீட்டிலிருந்தோரையும் முகாமுக்குக் கொண்டு சென்றார்கள். பத்து மணிக்குப் பிடித்துச் சென்ற அனைவரும் இரண்டு மணிக்கே விடுவிக்கப்பட்டனர். சாதாரண பொது மக்கள் இவ்வாறு கைது செய்யப்படுவது இன்று வலிகாமத்தில் சர்வ சாதாரண நிகழ்வாகின்றது. இந்த நிலையில் தமிழ் மக்கள் நிம்மதியாக இங்கு வாழ்வது எப்போது?

பெயர் குறிப்பிடப்படவில்லை.

# இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகசபை:

## தமிழ் எம்.பி.க்கள் கோரிக்கைபற்றி பி.பி.சி.க்கு தேவானந்தா பேட்டி

இலங்கையில் 45 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண நிர்வாகத்திற்கு 1987-ஆம் ஆண்டு இந்தியா இலங்கை உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு இடைக்காலக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இவர்களில் ஒருவரான ஈ.பி.டி.பி.—கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் இது பற்றிக் கேட்டோம்.

இலங்கை — இந்தியா உடன்பாடு பல ஆண்டுகளுக்கு முன்பு செய்து கொள்ளப்பட்டது. அது இன்னமும் நடைமுறையில் இருந்து வருகிறதா? ஏன் இப்படி ஒரு கோரிக்கை விடுத்து இருக்கிறீர்கள்? என்று கேட்டோம்.

### நீண்டகாலக் கோரிக்கை

பதில்: இலங்கை- இந்திய ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கிறதா? இல்லையா? என்பதைவிட, அதன் விளைவாக உருவாக்கப்பட்ட மாகாண சபை அமைப்பு முறை இன்றைக்கும் நடைமுறையில் இருக்கின்றது. இன்றைக்கு இலங்கையிலுள்ள 8 மாகாணங்களில் அந்த மாகாண சபைக்கு ஒரு அரசியல் தலைமைத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. வடக்குக்கிழக்கு மாகாண சபையைப் பொறுத்த வரையில் அங்கு அரசியல் தலைமைத்துவம் இல்லை. அங்கு அதிகாரிகளைக் கொண்ட ஒரு நிர்வாகம்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனபடியால் அந்த நிர்வாகியைக் கொண்டு இயங்குகின்ற — அதிகாரிகளைக் கொண்டு இயங்குகின்ற நிர்வாகத்திற்கு அரசியல் தலைமைத்துவம் ஏற்படுத்தச் சொல்லித் தான் நாங்கள் அரசாங்கத்தை நீண்ட காலமாகக் கோரி வருகின்றோம்.

ஏன் என்று சொன்னால் இன்றைக்கு எங்களுடைய மக்களுடைய நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த விதமான ஒரு பலமோ, தளமோ இல்லை. புலிகளுடைய கால கட்டத்தில் அவர்களுடைய கட்டுப்பாட்டினுள் அந்தப் பகுதிகள் இருந்தபோது, அங்கே அந்த மக்களுக்குப் போராட்டத்தைக் காரணம் காட்டி அவர்களுக்கு இதுச்கெல்லாம் சந்தர்ப்பம் கொடாது அடக்கி ஒடுக்கப்பட்டு இருந்தது. இன்றைக்கு அந்த இடத்திலே சிங்கங்கள் இருக்கு. அதனால் இன்றைக்கும் அந்த மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கிற மாதிரியில்லை. ஆனபடியால்தான் இந்தக் காலகட்டத்தில் நாங்கள் மக்களுடைய நாளாந்தப் பிர்ச்சனைதளைத் தீர்ப்பதற்கு இந்தத் தளத்தை ஏற்படுத்திதரச் சொல்லி திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

### அதிகாரப்பரவல் திட்டம்

கேள்வி: ஐயா, அதிகாரப் பரவல் திட்டம் கொண்டுவரப் போகின்றோம் என்று சொல்லுகிறாங்க. என்ன இருந்தாலும் அது ஒரு சில மாதங்களில் வந்து விடுமானால், அதற்குள் அவசரப்பட்டு இப்படியொன்று ஏன் ஏற்படுத்த வேண்டும்?

பதில்: இன்றைக்கு இந்தப் புதிய அரசாங்கம் வந்து இரண்டு வருடங்கள் கடந்து போயிட்டுது இன்னும் எவ்வளவு காலம் கடந்து போகும் என்று சொல்ல முடியாது. அது நாளைக்கும் வரலாம். அடுத்த நாளும் வரலாம். வராமல் போனாலும் போகலாம். ஆனபடியினால் நாளைக்குக் கிடைக்கக்கூடிய பலாக்காயை விட இன்றைக்கு கிடைக்கக் கூடிய களாக்காய் சிறந்தது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆனபடியினுல் அது வரட்டும் அதற்கு இது தடையாக இருக்க முடியாது. அது அதற்குரிய காலத்தில் அது வரட்டும். அந்த இடைப்பட்ட காலத்தில் அந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தளம் தேவை என்பதுதான் எங்களுடைய அபிப்பிராயம்.

### புனர் நிர்மாணம்

கேள்வி: இது தேர்ந்து எடுக்கப்பட்ட குழுவாக இருக்கோணும் என்று நினைக்கிறீங்களா எப்படி? இந்தத் தேர்வு நடத்த முடியுங்களா அங்கே?

பதில்; அதாவது ஒரு புதிய தீர்வுத் திட்டம் இருக்கும் போது, நாங்கள் ஒரு 13-வது திருத்தச் சட்டத்துக்கு அந்த அரசியல் தீர்வுக்கு வந்து ஒரு தேர்தல் நடத்துவது சரியல்ல. அந்த வகையில் அவசரகால நிலைமைக்குக் கீழ் அல்லது இலங்கை அரசியல் யாப்பினுடைய 154-எல்-அதற்குக் கீழ் ஜனாதிபதியால் நியமிக்க முடியும். இன்றைக்கு வட புனர் நிர்மாண • அமைப்பு என்று நியமிக்கப்பட்டு இருக் இருக்கின்றது அதே நேரம் தென் மாகாண அபிவிருத்திச் சபை என்று நியமிக்கப்பட்டு இருக்கின்றது. இந்த மாதிரி இந்தச் சட்டத்தின் மூலம் நியமிக்க முடியும்.

### இடைப்பட்ட காலம் தீர்வுக்கு காலம்

கேள்வி: நியமிக்கப்பட்ட குழுவுக்கு மக்கள் ஆதரவு இருக்கும் என்று நினைக்கின்றீர்களா?

பதில்: இது மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு. இதற்கும் மக்கள் ஆதரவுக்கும் சம்பந்தம் இல்லை. இது ஒரு நிர்வாக சபையேயொழிய, சட்டங்கள் ஆக்குகின்ற சபையல்ல. இன்றைக்கும் அந்த நிர்வாகம் இருக்கு மக்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றாற் போல் அந்தச் சபை இயங்கவில்லை.

ஒரு அரசியல் தலைமைத்துவம் இருக்குமாக இருந்தால் உதாரணம் இன்றைக்கு வட கிழக்குப் பிரச்சினை வந்து இலங்கையிலுள்ள பாதுகாப்பு சபை அறிக்கையை கொண்டு தான் செயல்படுத்தப்படுகிறது அந்தப் பாதுகாப்புச் சபையின் அறிக்கை முடிவுகளில் அந்த மக்களுடைய நாளாந்தப் பிரச்சினைகள் அல்லது அவர்களுடைய அபிலாசைகள் பிரதிபலிக்காது. அங்கே அரசியல் தலைமைத்துவம் இருக்கும் என்றால் தான், அது அங்கு பிரதிபலிக்கும். அங்கே உடனடியாகத் தேர்தல் நடத்த முடியாது என்றபடியால் ஒரு புதிய அரசியல் தீர்வுத் திட்டத்தை எதிர் நோக்கி இருக்கின்றபடியால், அதற்குத் தேர்தல் வைத்து, அதைச் சட்ட பூர்வம் ஆக்குவதைவிட அதே நேரத்தில் அந்த இடைப்பட்ட காலத்தில் உடனடியாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு களமாகத் தான் நாங்கள் அதைப் பார்க்கின்றோம்.

---

''எண்ணித் துணிக
கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது

திருக்குறள்: 467

படிப்பகம்

www.padippakam.com



## பொலநறுவையில் கண்ணி வெடிக்கு 6 பேர் பலி

இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 200 கிலோ மீற்றர் வட கிழக்கில் அமைந்துள்ள பொலன் நறுவை என்ற இடத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நிலக் கண்ணி ஒன்று வெடித்த போது பொதுமக்கள் ஆறு பேர் கொல்லப்பட்டதாக இலங்கை ராணுவ அதிகாரிகள் அறிவித்து இருக்கின்றார்கள். மோட்டார் வாகனம் நிலக்கண்ணி மீது சென்றதும் அது வெடித்ததும் உடனடியாக மறைந்து, பதுங்கியிருந்த புலிப்படைப் போராளிகள் பொலிசார் மீது சுட்டார்கள் என்றும் அதிகாரிகள் அறிவித்து இருக்கிறார்கள். கொல்லப்பட்ட ஆறுபேரில் இரண்டு குழந்தைகளும் அடங்கியுள்ளனர்.

# இனப்பிரச்னைக்கு யுத்தத்தால் மட்டும் தீர்வு எந்தவொரு நாட்டிலும் காணப்படவில்லை

**-ல.ச.ச. கட்சி பொது செயலாளர் பெட்டி வீரக்கோன்**

ஸ்ரீ ல.ச. கட்சிக்குள் வேரூன்றிப் போயிருந்த இனவாதத்தைக் கட்டுப்படுத்தி அதிகார பரவலாக்கலின் மூலம் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க அரிய சூழ்நிலை ஒன்றை உருவாக்கிக் கொடுத்துள்ளார். நாட்டின் அபிவிருத்தியிலும் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விலும் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு யுத்தத்துக்கு நிரந்தர முற்றுப்புள்ளிவைக்கத் தம்மாலான முழுப் பங்கினையும் வழங்க முன்வரவேண்டும்.

ல.ச. சமாஜக்கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெட்டி வீரக்கோன், மாத்தளை நகர மண்டபத்தில் நடைபெற்ற "அதிகார பரவலாக்கலின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு" என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போது இவ்வாறு கூறினார்.

### என்.எம். பெரேரா சொன்ன யோசனை

மேற்படி கருத்தரங்கு ல ச.ச. கட்சி மாத்தளை கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாத்தளை கிளை செயலாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான ஜே.பி. திசாநாயக்கவின் வரவேற்புரையையடுத்துப் பேசிய பெட்டி வீரக்கோன் மேலும் கூறியதாவது:

முன்னைய சிங்கள அரசியல்வாதிகள் சிங்கள மொழிக்கு மட்டும் முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுத்தமையினாலேயே இன்றைய நெருக்கடி தோன்றியது. இந்நாட்டில் இப்படியான நிலை ஏற்படுமென்பதை ல ச.ச. கட்சி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே அறிந்திருந்தது. இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை கருத்தில் கொண்டே 1956 ஆம் ஆண்டு மொழிப் பிரச்சினை உருவான போது சிங்கள மொழியுடன் ஆங்கில மொழிக்குப் பதிலாக தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென கலாநிதி என்.எம் பெரேரா வாதாடினார். அன்றைய பேரினவாத அரசியல்வாதிகள் அதனை உதாசீனம் செய்தனர். அதன் பலனையே இன்று முழுநாடும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

சிங்கள மொழிமட்டும் அரசமொழியாக்கப்பட்ட போது வடபகுதி அரசியல் கட்சிகள் அதனைக் கருவாகக் கொண்டு தம்மை பலப்படுத்திக் கொண்டன. இதனடிப்படையிலேயே இந்நாடு இரு கூறாகப் பிரியும் நிலை ஆரம்பமாகியது.

### மாகாண சபை வந்த விதம்

இன்று அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகார பரவலாக்கல் யோசனை, இந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டதல்ல. ஜே.ஆர். அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தார். கடைசியாக நிர்ப்பந்தம் காரணமாக அதனை ஏற்றுக் கொண்டு அமுல்படுத்த முன் வந்தார். அதனடிப்படையிலேயே மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

நாம் முன் வைத்த அதிகார பரவலாக்கல் யோசனைத் திட்டத்தைத்தான் இந்த அரசு புதுமெருகூட்டி சட்டத்திருத்தம் செய்து இன்று மக்கள் முன் வைத்துள்ளது. எனவே இன்றைய அதிகார பரவலாக்கல் யோசனை பொ.ஐ.மு. அரசுக்கோ ஐ.தே.க. அரசுக்கோ சொந்தமானதல்ல. இது, ல.ச.ச. கட்சி ஆரம்ப காலத்தில் சர்வ கட்சி மாநாட்டுக்கு சமர்ப்பித்த யோசனை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### ஐ.தே.க.வின் தோல்விக்கு காரணம்

சென்ற அரசு முறையாக யுத்தம் செய்யத் தவறியமையினால் தான் வெற்றிபெற முடியவில்லை என்று இன்று பலர் கூறுகின்றனர். இது முற்றிலும் உண்மைக்கு புறம்பான கூற்றாகும். சென்ற அரசு பல்வேறு நாடுகளின் ஆயுத உதவியுடன் முழு சக்தியையும் பயன்படுத்தி பரந்த அளவில் யுத்தத்தை வழிநடத்தி வந்தது. இருந்தும் வெற்றி கிட்டவில்லை என்றால் யுத்தத்தின் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதே உண்மையாகும். ஐ.தே கட்சியினர் யுத்தத்தால் மட்டும் இப்பிரச்சினையை தீர்த்து வைக்க முற்பட்டார்களே தவிர முறையான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவில்லை. ஐ தே. கட்சியினரின் தோல்விக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

இனப்பிரச்சினை நிலவிய எந்தவொரு நாட்டிலும் யுத்தத்தால் மட்டும் தீர்வுகாணப்பட்டுள்ளதாக வரலாறு இல்லை. யுத்தம் செய்து வெற்றி பெற்றாலும் பேச்சுவார்த்தை மூலமே நிரந்தரத் தீர்வு காணப்பட்டுள்ளதை வரலாறுகள் காட்டுகின்றன.

(7ம் பக்கம் பார்க்க)

# கனடாவில் ஒன்ராரியோ மாகாண அரசின்கீழ் தமிழ்மொழிக் கல்விக்கான திட்டங்கள்

**- 'இலங்கையன்' (கனடா) -**

கனடிய மத்தியஅரசின் பல் கலைகலாசாரக் (Malticultural) கொள்கைக்கமைய, மாகாண அரசுகள் ஆங்கிலம், பிரான்சியம் சுதேசி மொழிகளுக்கான கல்வித்திட்டங்களுக்குப் புறம்பாக மற்றைய உலகமொழிகளுக்கான கல்வி திட்டத்தையும் (International languages program) நடைமுறைப்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் நடைபெறும் மொழிக்கற்கை நெறிகள் (lenguages Courses) ஆங்கிலம், பிரான்சியம், சுதேசி மொழிக்கற்கை நெறிகள் போலல்லாது, விருப்பு நெறிகளாகவே (Optional) கற்பிக்கப்படுகின்றன. மாகாணங்களில் கற்கும் பல்வேறு மொழிகளை முதல் மொழியாக அதாவது தாய்மொழியாகக் கொண்டுள்ள மாணவர்களினதும் அவற்றைக் கற்க விரும்பும் மாணவர்களினதும் எண்ணிக்கையைப் பொறுத்தே, இம்மொழி கற்கை நெறிகளுக்கான வகுப்புகளே மாகாணங்களின் பல்வேறு கல்விச்சபைகளால் (Education Boards) ஆரம்பிக்கப்பட்டு, நடாத்தப்படுகின்றன.

### தமிழ் மொழிக் கல்வியின் தன்மை

தமிழ் மொழிக் கல்வியைப் பொறுத்தவரையில், கனடாவிலுள்ள மாகாணங்களில், ஏறக்குறைய ஒரு லட்சம் தமிழர்கள் அதாவது கனடாவாழ் தமிழர்களில் சுமார் 90 வீதமானோர் வாழும் ஒன்ராரியோ மாகாணத்தில் ரெஹன்ரோ பெருநகரத்தையும் அதையண்டிய நகரங்களிலுமுள்ள பத்துக் கல்விச்சபைகள், ஆரம்பநிலை அதாவது தரம் 1-லிருந்து 8 வரை கற்கும் மாணவர்களுக்கான தமிழ்மொழிக்கல்வி வகுப்புகளை 40 பாடசாலை நிலையங்களில் இவ்வருடம் தொடர் கல்வித்திட்டத்தின் கீழ், வார இறுதி நாட்களிலும் வார நாட்களிலும் நடத்திவருகின்றன. இவ்வகுப்புக்களில் மொத்தமாக ஏறக்குறைய 2800 பிள்ளைகள் சேர்ந்து படிக்கின்றார்கள். இவர்களுக்கு மொழியைக் கற்பிப்பதற்கு ஏறக்குறைய 100 ஆசிரியர்கள் பகுதி நேர அடிப்படையில் கல்விச்சபைகளால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இப்பகுதியிலுள்ள ஆறு கல்விச்சபைகள், இரண்டாம் நிலை அதாவது தரம் 9-லிருந்து 13 வரை கற்கும் மாணவர்களுக்கென தரம் 10 லிருந்து 13 வரைக்கான திறமைச்சித்திப் பாட நெறி வகுப்புக்களை (Credetcouse Classes) 9 பாடசாலை நிலையங்களில் இவ்வருடம் தொடர் கல்வித் திட்டத்தின் கீழ் வார இறுதி நாட்களில் நடத்திவருகின்றன. இவ்வகுப்புக்களில் மொத்தமாக 500 மாணவர்கள் வரையிற் கற்கின்றார்கள்.

### ஆசிரியத் தகைமைகள்

இவ்வகுப்புக்களில் கல்வி கற்பிப்பதற்கென ஒன்ராரியோ மாகாணத்து ஆசிரியத் தகைமை ஏதேனும் பெற்ற 20 தமிழ் ஆசிரியர்கள் பகுதி நேர அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டு தமிழ்மொழி ஆசிரியர்களாக பணியாற்றுகிறார்கள். இத்தரங்களில் பெறப்படும் முதல் மூன்று திறமைச் சித்திகள், ஒன்ராரியோ இரண்டாம் நிலைக் கல்வி டிப்ளோமோவுக்குத் தேவையான 30 திறமைச் சித்திகளுள் மூன்றாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

13 ஆம் தரத்திற்கான திறமைச்சித்தி, ஒன்ராரியோ பல்கலைக்கழகங்களின் பிரவேசத்திற்குத் தேவையான ஆறு திறமைச்சித்திகளுள், ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது;

### தமிழ்ச் சமூகத்தின் குறைபாடு

ஆனால் புலம்பெயர்ந்த நாட்டில் எமது தாய்மொழியாகிய தமிழை எமது மாணவர்கள் கற்பதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஒன்ராரியோ மாகாண அரசும், கல்விச் சபைகளும் அளித்து வருவதைவிட்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடையும் அதே நேரத்தில், இத்தமிழ் மொழி வகுப்புக்களில் சேர்ந்து படிக்கும் எமது மாணவர்களின் எண்ணிக்கைகள், வழமையான நாளாந்த வகுப்புக்களில் சேர்ந்து படிக்கும் எமது மாணவர்களின் எண்ணிக்கைகளோடு ஒப்பிடும் பொழுது, எமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. ஆரம்ப நிலை மாணவர்களுக்கான திறமைச்சித்தி வகுப்புகளைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய 25 வீதமான மாணவர்களும், இரண்டாம் நிலை மாணவர்களுக்கான திறமைச் சித்தி வகுப்புகளைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 8 வீதமான மாணவர்களே சேர்ந்து தமிழ்மொழியைக் கற்கின்றார்களென அறியக் கிடக்கின்றது. இதற்கான காரணம் பெற்றோரையும் சமூகத்தையுஞ் சார்ந்ததென்றே கூறவேண்டும்.

### தொண்டர் அடிப்படை

கல்விச்சபைகளால் நடாத்தப்படும் தமிழ்மொழி வகுப்புக்களைவிட, சமூகத்தில் இயங்கும் சபைகளும் சங்கங்கள் சிலவும் ஆரம்பநிலை மாணவர்களுக்கென தமிழ்க்கல்வி வகுப்புக்களை நடத்துகின்றன. இதற்கான அரச மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் ஆதரவும், மானியங்களும் வழங்கப்படுவதுண்டு. இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் சிறிதளவு கொடுப்பனவுடன் தொண்டர் அடிப்படையிலேயே பணியாற்றுகின்றார்கள் கனடாவின் மற்றைய மாகாணங்களில் இந்த அடிப்படையிலேயே, எமது சமூகத்து இயக்கங்கள் இவ்வகுப்புக்களை சமய போதனையுடன் இணைத்து நடத்துகின்றன.

பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் தமிழ்மொழிக் கலாச்சார நாகரிக கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## கண்ணீரில் கரைந்த கவிதை

இனக்கலவரத்தில்
ஈழத்தில் பட்ட
இன்னல்களை
கவிதையாக
காகிதத்தில் வரைந்தேன்
ஏனோ
இதயம் வலித்தது
கண்கள் இருண்டது
கண்களை
கசக்கிப் பார்த்தேன்
காகிதத்தில் இருந்த
கவிதைகள்
என் கண்ணீரில்
கரைந்து கொண்டிருந்தன!

சு. சிவா
AE-1, இ.அ. முகாம்,
வாழவந்தான் கோட்டை
திருச்சி-15.

---

மட்டக்களப்பு பாடசாலைகளில்

## தமிழில் பாடசாலை விடுகை பத்திரம் இல்லை

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மொழி மூலப் பாட சாலைகளில் சிங்கள மொழி மூலமான பாடசாலை விடுகைப் பத்திரங்களை பயன்படுத்த வேண்டாமென வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழி மூலமான பாடசாலை விடுகைப் பத்திரங்களை நிரப்புவதற்கு சிங்களம் தெரியாத அதிபர்கள் சிரமப் படுவதாகவும் சில வேளைகளில் தவறுகள் நிகழ்வதாகவும் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதிலும் தமிழ் மொழி மூல பாடசாலை விடுகைப்பத்திர படிவங்களை வழங்க மாகாண கல்வித் திணைக்களம் எந்த நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்க வில்லை. இது குறித்து பாடசாலை அதிபர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

தற்போது முதலாம் தவணையாக இருப்பதால் புதிய மாணவர்களை அனுமதிக்கும் போது அப்படிவங்கள் இல்லாததால் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அதிபர்கள் தெரிவிக்கிறார்கள்:

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பதிப்பகத் திணைக்களம் மாகாணக்கல்வி அமைச்சின் கீழேயே உள்ளது. எனவே உடனடியாக தேவையான படிவங்களை அச்சிட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

---

## விடியட்டும் விடியட்டும்

விடியட்டும் விடியட்டும் செவ்வானம்
அதில் வெளிச்சத்தைப் பெறட்டும் தமிழ் ஈழம்

மலரட்டும் மலரட்டும் பூக்கோலம்
அதில் நறுமணம் பெறட்டும் தமிழ் ஈழம்

போடட்டும் போடட்டும் மேகம் புதுத்தூறல்
அதில் வசந்தம் பெறட்டும் தமிழ் ஈழம்

பாடட்டும் பாடட்டும் குயில்கள் புதுக்கீதம்
அதில் வாழ்த்துப் பெறட்டும் தமிழ் ஈழம்

ஆடட்டும் ஆடட்டும் வண்ண மயில்
அதன் தோகை போல் அழகு ஆகட்டும் தமிழ் ஈழம்

P. S. அன்ரனி
கீழ்ப்புதுப்பட்டு

## புகழ்மாலை சூட்டு

தாழ்ந்து கிடந்த நிலையகற்றி
எழுந்து நட தமிழ்த் தோழா
வீழ்ந்து கிடந்தது போதுமிங்கே
சூழ்ந்து கிடக்குது பகையுன்னை

காழ்ப்புக் குணங்கொண்டோருன்
வாழ்நாளை அழிக்கின்றார்
பாழ் அறிவு கொண்டோருன்னை
சூழ்ந்தருகில் இருக்கின்றார்

ஒட்டியுறவாடியுன்னை
வெட்டி முறிக்கப் பார்க்கின்றார்
எட்டியுதைத்துத் தள்ளடா
பெட்டிப்பாம்பாய் கிடக்காதே

பார்வையிலே நல் வேடமிட்டு-பொய்ப்
போர்வையிலுன்னை மறைத்திடுவார்
பார்...பார், பாரினை எண்ணிப்பாரடா
நேர்மைமிகு மாந்தர் யாரெனக் கூறுடா ?

ஆற்றுப்புனல்போல் பேச்சுரைக்கும்
வேற்று மாந்தர் இருக்கின்றார்-அவர்
கூற்றுதனை நம்பாதேடா-அஃது
காற்றில் கலந்த நச்சுக்கிருமிதான்டா

பொன்னான உலகமும், உயர்வும்-தோழா
உன்னாலே உருவாக வேண்டுமடா
எந்நாளும் நல்லறிஞர் தடத்தில்
உன் புகழ் மாலை மணம் வீச வேண்டுமடா?

''கவிசுரபி''
சுப. சந்திரசேகரன்

## வினாக்கள் விடையற்றுப் போகுமோ?

வினாக்கள் பலவந்து நெஞ்சினில் விழுந்தனவே
விடையின்றி அவையெல்லாம் வீணாகி விடுமோ ?
தேனோடு பாலாகி பாரினில் இனிதாய்
தித்தித்த தமிழினம் மீள்வது எக்காலம் ?
கானோடு மானாகி துள்ளித் திரிந்த
கன்னித் தமிழர் கவலைகள் தீர்வது எக்காலம்?

ஆலோடு வேராகி மண்ணில் அடியூன்றிய
அழகினம் ஈழம் ஆள்வதும் எக்காலம்?
நூலோடு பட்டமாய் வானில் பறந்தாடிய
நற்றமிழர் நலம் பெறும் காலமது எக்காலம் ?

மலரோடு மணமாய் வாசம் வீசியிருந்த
மனிதர்களின் மானம் நிலைப்பதுவும் எக்காலம் ?
வண்ணம் கொண்ட வானவில்லின் அழகுபோல்
காவியங்கள் தமிழன் படைப்பது எக்காலம் ?

நீரோடு மீனாகி நீந்தி மகிழ்ந்திட்ட
நீரோடை வற்றியதே; மழையினி எக்காலம் ?
பேரோடு புகழுடன் வாழ்ந்த தமிழர்கள்
பேதைகளான சோகம் முடிவது எக்காலம் ?

சோகவி. செல்வநாதன்
இ.அ.முகாம், தோப்புக்கொல்லை,
புதுக்கோட்டை-622 303.

---

## மொட்டிதழ் விரிக்கும் முன்!

பேதையர் பெதும்பையர்
மங்கையர் ஆகும் முன்
ஈழத்துச் சிறுமியர்
மொட்டிதழ் விரிக்கும் முன்
சிங்களக் காடையர்
சிதைக்கிறார் பெண் கற்பை!!

பள்ளிக்குச் சென்று வந்த
தேனுகா என்ற பெண்!
கல்லூரி சென்று வந்த
கிருஷாந்தி என்ற பெண்!
வன்முறைக் காடையரால்
கற்பிழந்து போயினரே!......
சிங்கள க் காடையர்
சிதைக்கிறார் பெண் கற்பை!!

என் நெஞ்சு கொதிக்கிறதே!
துயிலுறவும் மறுக்கிறதே!
தமிழச்சி கற்பிழக்கும்
சேதி கேட்கப் பிளக்கிறதே!
சிங்களக் காமுகரைப்
பழிவாங்கத் துடிக்கிறதே!......
சிங்களச் காடையர்
சிதைக்கிறார் பெண்கற்பை!!

இராவணனை இழந்ததற்கு
இன்றுதான் ஏங்குகிறேன்!
ஈழத்திலவன் இன்றிருந்தால்
ஈன நிலை மடிந்திருக்கும் !
ஈழக்கனி கனிந்திருக்கும் !
இழந்ததினால் அவனை இன்று
சிங்களச் சிறுத்தையர்
சிதைக்கிறார் பெண் கற்பை !!

பாரதி இருந்திருந்தால்
கற்பழிப்பைக் கடிந்திருப்பான் !
பாரதி தாசனிருந்தால்
தெற்குத் திசை நோக்கியிருப்பான் !
பதவிசுகம் வெறுத்திருந்தால் !
சில சான்றோர் கூடக் குரல் கொடுப்பார் !
பதவி மோகம் கொண்டதனால்
குரல் கொடுக்க மறந்ததினால் !
சிங்களச் சிறுத்தையர்
சிதைக்கிறார் பெண் கற்பை ! !

தமிழகம் தூங்கும் வரை
தமிழீழம் விடியாது ?
தலைவர் கலைஞர் குரல் கெடாத வரை
தனி நாடு நமக்கேது ? ! !

'சேரன்' இளங்கோ
இ.அ. முகாம், தோப்புக்கொல்லை

## எங்கும் யாம் அகதிதானா ?

இலங்கையில் பிறந்ததினால் இந்தியாவில் அகதிகளாம்-
இந்தியாவில்
இருந்துவிட்டு மீண்டும் இலங்கை வந்தாலும் அகதிகளாம்
இந்தியாவில் நாங்கள் இலங்கை அகதி
இலங்கையில் நாங்கள் இந்திய அகதி
போகின்ற இடமெல்லாம் அகதியென்றால்-தமிழன்
போக்கற்ற சாதியா ? புகலிடம் இல்லையா ?
அகதியென்ற பட்டம் அகல்வது எப்போது ?
அகிலத்தில் தமிழீழம் அமைவது எப்போது ?

சு. பவாராணி
இ.அ. முகாம், கன்னிகாபுரம், கஸ்தம்பாடி.

## ஈழமே என் காற்று

என் ஈழத்து தேவதையே—உன்
பிரிவினில் வாடுகின்றேன்—நான்
ஏந்திய ஆயுதமே உன்
வரவினை நாடுதம்மா (என்)

நான் பிறந்த இந்த மண்ணில்
எம் சுதந்திரம் எங்கே ?
போராடினேன் உனை நான் சேரவே
எம் குருதியோ ஆறாய் ஆனதே (என்)

காலங்கள் யாவும் தன்மானங்கள்
நீயே! நான் வாழ்கிறேன்
உனைத்தான் மீட்கவே
விதியே விலகிப்போ! (என்)

பிரான்சிஸ் ரொபர்ட்சன்
இலங்கை அகதிகள் மூகாம், பாணாவரம்

படிப்பகம்

துயர் துடைப்பு பணிக்கு

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நிதி வசூல் செய்ய திட்டம்

## வருடாந்த பொதுக்கூட்டத்தில் தகவல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்குரிய உறுப்பினர்களில் 43.6 சதவீத உறுப்பினர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே உள்ளனர். 11 ஆயிரம் உறுப்பினர்களில் 4.800 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களென்பது எமக்கு பெருமையளிப்பதாகுமென மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செஞ்சிலுவைச் சங்க கிளைச் செயலாளர் க. அமரசிங்கம் குறிப்பிட்டார்.

மண்முனைப்பற்று பிரதேச இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். ஆரையம்பதி இராம கிருஷ்ணமிஷன் வித்தியாலயத்தில் நிகழ்ச்சி இடம் பெற்றது

அவர் தொடர்ந்து பேசுகையில் முன்னர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளைகள் தலைமையகத்திலிருந்து கிடைக்கும் நிதி உதவியை பெற்றே நிர்வாக செலவுகளை ஈடு செய்தன.

### முழுமையாகச் செய்ய முடியாமை

தலைமையகத்தில் இடம் பெற்ற நிர்வாக சீர்கேடுகளைத் தொடர்ந்து தற்போது வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப் பட்டு விட்டன.

எனினும் மாவட்டத்தில் நிலவும் இக்கட்டான நிலைமையை கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட கிளை மிகுந்த பிரயத்தனங்களுக்கு மத்தியில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக் களப்பு மாவட்டக் கிளைத்தலைவர் த. வசந்தராஜா பேசுகையில் பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பல்வேறு நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம். அனைவருக்கும் உதவ வேண்டுமென்று விரும்பினாலும் நிதி பலம் இல்லாமையால் முழுமையாக செயற்பட முடியவில்லை.

எனவே நம்மவர்கள் மத்தியிலிருந்து நிதிதிரட்டும் திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளோம் பொதுமக்கள் துயர் துடைப்பு பணிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

### ஜெர்மனி நிதி ஒதுக்கீடு

மாவட்ட செயலாளரும், செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலக ஆளுநர் உறுப்பினருமான க. கணேசானந்தம் உரையாற்றுகையில் ''வசிப்பிடங்களை இழந்த அகதிகளுக்கு வீடும் மலசல கூடமும் அமைக்க ஜேர்மனி அரசு நிதி ஒதுக்கீட்டை எமக்கு வழங்க முன் வந்துள்ளது. நிதி வந்தடைந்ததும் திட்டங்களை தொண்டர்களின் உதவியுடன் மேற்கொள்வோம்'' என்றார்.

மண்முனைப்பற்று பிரதேச இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-இ. குமாரசாமி
உபதலைவர்- மா. சதாசிவம்
செயலாளர்- க. அமரசிங்கம்
பொருளாளர் மா. காசிப் பிள்ளை. ஐந்து நிர்வாக சபை உறுப்பினர்களும், 21 மாவட்ட சபை பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## எங்களுக்கு உதவுவார் யார் ?

ஈழத் தமிழனாய்ப் பிறந்ததனால்
எரிமலையை நெஞ்சில் சுமக்கின்றோம்
தமிழ் மொழி தன்னைப் பேசுவதால்
தலையில் இடியைத் தாங்குகின்றோம்
வளமான எதிர்காலத்தை எண்ணி
வனப்புடன் வாழ்ந்த கன்னியரே
வேதனைதரும் விதவைக் கோலத்தை
வேண்டாமலே பெற்றுச் சுமக்கின்றோம்
அப்பா அம்மா கனவை நனவாக்க
அவர்கள் பெற்ற ஆண்மக்களோ
துப்பாக்கியைத் தூக்கிச் சுமக்கின்றோம்
சுடலையில் தினம் தினம் அழிகின்றோம்
சாதாரணத் தமிழ்ப் பொதுமக்களோ
தாங்கள் சம்பந்தப் படாவிடினும்
தாய்நாட்டிலும் அகதிகளாய்
தமிழ்நாட்டிலும் அகதிகளாய்
உலகமெங்கும் அகதிகளாய்
உருக்குலைந்து திரிகின்றோம்
எங்கள் துயர் மறையுமா ?
ஏக்கங்கள் தீருமா ?
எங்களுக்கு உதவுவார் யார்
என்று தேடி அலைகிறோம் !

P. கணேசன்-ஏமலதா
இ.அ. முகாம், ஆற்காடு.

## இன்று முதல் கலை பயில்!

கலை பயில்வோம்-இனிய
கலை பயில்வோம் !

தம் வாழ்வை நாம் காக்க
வழி வகுப்போம் — நல்ல
வழி வகுப்போம்!

நாளை தமிழ் ஈழமது
மலர் கையிலே நாமெமது
காலினிலே நிற்கனுமே தம்பி !

பாழடைந்த பூமி அதைச்
சோலை வனமாக்கி நீயும்
இனிமையாக வாழனுமே தம்பி !

கலை இழந்த ஈழத்திலே
கலை அனைத்தும் நீ பரப்பி
கனிவுடனே ஆடனுமே தம்பி !

அதற்கு...
கைத்தொழில்கள் பல படித்து
கனவானாய் நீ சென்றால்
வளமாகும் நம் நாடு தம்பி !

எனவே...
இன்று முதல் ஏதேனும்
கலை பயில்வேன் என்றுவொரு
உறுதியுடன் செயற்படடா தம்பி !

நாளை தமிழ் ஈழமுனை
தமிழீழச் சிற்பியென
பாமாலை படித்திடுமே தம்பி ! !

'அமுதாலயம்'
தோப்புக்கொல்லை

# தற்காலிக அடையாள அட்டை வழங்க மன்னாரில் புதிய ஒழுங்கு

விண்ணப்பதாரி குறைந்தது ஆறு மாத காலமாவது தங்கள் பகுதியில் வசித்திருந்தால் மட்டுமே மூன்று மாத கால நீடிப்புக் கொண்ட தற்காலிக அடையாள அட்டையை வழங்க முடியும் என மன்னார் உதவி அரசாங்க அதிபர் செல்வி எஸ் கணபதிபிள்ளை சகல கிராம அலுவலர்களுக்கும் அறிவித்துள்ளார்

தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குதல் தொடர்பாக கடைப்பிடிக்கப் பட வேண்டிய நடை முறைகள் குறித்து அண்மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அடையாள அட்டை வழங்குமாறு கோரி விண்ணப்பதாரி இரு பிரதிகளுடன் விண்ணப்பத்தையும் தற்காலிக அடையாள அட்டைக்குரிய காட் விண்ணப்பதாரியின் படம் என்பனவற்றைச் சமர்ப்பிக்கும்போது விண்ணப்பதில் விண்ணப்பதாரி தொடர்பான சகல விபரங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதை சம்பந்தப் பட்ட கிராம சேவகர்கள் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி தங்கள் பகுதியில் வசிக்காதவராக இருந்தும் தற்காலிக அடையாள அட்டை வழங்க வேண்டிய தேவை ஏற்படின் கிராம அலுவலர் விண்ணப்பதாரியைத் தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தால் அல்லது விண்ணப்பதாரி பிரிவின் நிரந்தர வாசி அவரது நன்நடத்தை தொடர்பாக உறுதிப் படுத்திப் பொறுப்பேற்றால் கிராம அலுவலர் தமது பூரண விசாரணையின் பின் தற்காலிக அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இவ்வாறான அடையாள அட்டைக்குரிய கால நீடிப்பு குறைந்தது இரண்டு வாரங்களாகவும் கூடியது ஒரு மாத மாகவும் அமையும்.

# இனப் பிரச்சினைக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

1970-ஆம் ஆண்டு காலத்தில் கலாநிதி என்.எம். பெரேரா நிதி அமைச்சராகப் பதவி வகித்த போதே அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் யாவும் அந்தந்தப் பகுதியில் உள்ள அரச நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர கொழும்பிலிருந்து அதனை செயல்படுத்தக்கூடாது என்று அதிகார பகிர்வு யோசனையை முன் வைத்தார்.

### வேண்டாம் யுத்தம்

எல். ரி. ரி. ஈ.யினர் சுய தேவைகளை பூர்த்திசெய்து கொள்ளவே யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு அதிகார பரவலாக்கல் யோசனை தேவை இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்கு அவை அவசியமானதாகும். இதனை சிங்கள மக்கள் உணரவேண்டும். அதிகார பரவலாக்கல் மூலம் நாம் விரும்பியதை கொடுக்க முயற்சி செய்யாமல், தமிழ் மக்களுக்குத் தேவையானவற்றையே வழங்கவேண்டும்.

இன்றைய யுத்தத்தால் சகல இனமக்களுமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொருளாதாரம் பெருமளவில் வீழ்ச்சியடைத்துள்ளது தினமும் நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. அபிவிருத்தி என்ற பெயரில் பல்வேறு அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் யுத்தச் செலவுக்காக தனியார் மயமாக்கப் பட்டு வருகின்றன. இந்நிலை தொடருமானால் இன்னும் ஓரிரு வருடங்களில் இந்நாடு குட்டிச்சுவராகிவிடும். எனவே அதிகார பரவலாக்கல் யோசனை திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்த நாட்டு மக்கள் அனைவரும் முழுமையான பங்களிப்பினை வழங்க முன்வரவேண்டும்.

இந்நாட்டு சிறுபான்மையினரின் உதவியின்றி ஐ.தே. கட்சியினரால் என்றும் பதவிக்கு வரமுடியாது. எனவே அரசு முன்வைத்துள்ள அதிகார பரவலாக்கல் யோசனைக்கு ஆதரவு நல்குமாறு சிறுபான்மையின மக்கள் ஐ.தே. கட்சியினருக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும்'' என்றார்.

# ஓட்டமாவடியில் கிரனைட் வீச்சு இருவர் காயம்

ஓட்டமாவடியில் உள்ள வீடு ஒன்றின் முன்பாக கிரனைட் வீசப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த கே. ரபீகா (வயது 28) நிரோசா (வயது 8) ஆகிய இருவரும் காயங்களுக்கு உள்ளாகி மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடி பிரதான வீதியில் இவ்வீடு அமைந்துள்ளது.

தனிப்பட்ட பகைமை தான் இச்சம்பவத்திற்குக் காரணமாக இருக்கக் கூடுமென சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் பொலீசார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடத்தினர்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# வாழ்க்கை

**M. அனிதா**

இ. அ. முகாம், களியரக்காவிளை, குமரி மாவட்டம்

சிறுகதை

பஸ் பெருமூச்சு விட்டபடி நிற்க கண்டக்டர் அவனைப் பார்த்து "தம்பி! நீங்கள் தானே வடக்கான்குளம். ஊர் வந்திருச்சு இறங்குங்க" என்று சொன்னார். அவன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு விரைவாக படியின் ஊடாக இறங்கினான்.

பஸ் கண்டக்டரின் விசில் சத்தத்துடன் புறப்பட்டது. தன் சொந்த ஊருக்கு வந்தாலும் தான் அந்த ஊரை விட்டுச் சென்று பதினைந்து பதினாறு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு தன்னைத் தடுமாறச் செய்து விடுமென்று நினைத்தே கண்டக்டரிடம் கூறியிருந்தான் ஊர் வந்ததும் கூறச்சொல்லி.

ஆனால் தான் நினைத்தது போல அதிகமாக ஊர் மாறவில்லை. இருந்து ஒரு சில வீடுகளே பங்களா போலவும் அதோடு மின்சாரக் கம்பியும் கூரைவீடுகளாயிருந்தவை ஓடுடனும் டி.வி.யின் கேபிள் ஒயருமாக இருந்தது. இப்படி இல்லாவிட்டால் பழைய மாதிரியே ஊர் இருந்திருக்கும்.

தான் ஊரை விட்டு ஓடி பதினைந்து வருடமிருக்கும் முன்பு நடந்த ஒரு சம்பவமே தான் ஊரைவிட்டு ஓடுவதற்கு தன்னை மாற்றியது என உணர்ந்தான். அவனால் அந்த வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய அந்த நிகழ்ச்சியை மனம் அசைபோட்டது. "எப்படியிருப்பாள் இப்போது லட்சுமி?" அது நடந்தபோது அவளுக்கு பதினைந்து பதினாறு வயதுதான் இருக்கும்.

"அப்போது, நான் அடுத்த ஊரில் பத்தாவது படித்துக் கொண்டிருந்தேன். என் தந்தை ஊருக்கு முக்கியமானவர். அவரின் கோபம் யாரையும் யோசிக்கவைத்து விடும். அவர் ஒரு விவசாயிதான். இருந்தும் நல்ல வாட்டசாட்டமாக சினிமா நடிகரைப்போல இருப்பார். எனினும் அவரின் முன் நிற்பவர்கள் கவனமாக நிற்கவேண்டும். எப்போது கோபம் வரும் கைநீளும் என்று அவருக்கே தெரியாது. ஊரையே இப்படி நடுங்க வைக்கும் அவர் என்னை மட்டும் விட்டு வைப்பாரா? அம்மா எனது பத்தாவது வயதிலேயே என்னை விட்டு இறந்துவிட்டார். பிறகு அப்பாதான் எனக்கு எல்லாமே. அப்பாவைப் பெற்ற தாயான பாட்டிதான் சமைத்து போடுவாள்."

அவன்மனம்மேலும் அசைபோட்டது. இப்படிப்பட்ட நிலையில்தான் அவன் வீட்டிற்கு ஒரு குடும்பம் குடிவந்தது. அதில் வந்தவள்தான் லட்சுமி.

"அவள் பக்கத்து வீடான என் வீட்டிற்கு மெல்ல மெல்ல வந்து பாட்டியுடன் பேசலானாள். அதோடு அன்பாகவும் நடந்து சமையலுக்கு உதவி புரிந்தாள்."

அவன் நினைவலைகள் தொடர்ந்தன. லட்சுமி அவனை விட இரண்டு மூன்று வயது மூத்தவளானது அவனுக்கு மிகவும் வேதனையாகவே இருந்தது ஏன் என்றால் அவன் வயது அப்படிப் பட்டது. பெண்களைப்பற்றிய கற்பனைகள் அதிகம். மிகவும் அருகில் லட்சுமியைப் பார்த்ததும் சிறகடிக்கத் தொடங்கின.

அவன் அவளை தன்னையறியாமலே விரும்பத் தொடங்கினான். அதாவது அவளின் அருகாமையை விரும்பினான் என்றே கூறலாம்.

அவளின் தூக்கிச்செருகும் சேலையின் இலாவகமும் மஞ்சள் பூசிய குழந்தை முகமும் மின்னல் போன்ற விம்மிப் புடைத்த மார்பும், இடுப்பும், அவனை அடிக்கடி நிலைகுலையச் செய்தன அன்று பள்ளியை விட்டு வெகு நேரத்துடன் வந்து விட்டான் வீட்டில் அப்பாவுமில்லை. இரவு தான் வருவார் என அறிந்தான். அதோடு பாட்டியும் அடுத்த தெருவிற்கு பிரசவம் பார்க்கச் சென்று விட்டார் என அறிந்தான்.

லட்சுமிதான் வீட்டில் முற்றத்தில் நின்றாள். "வா கோபாலா வா! பாட்டி உனக்கு காபி போட்டுக் கொடுக்கச் சொன்னா" சமையல் கட்டுக்கு சென்றாள். சமையல் கட்டில் சேலையை தூக்கிச் செருகியபடி அடுப்பைக் கிளறுவது அவனுக்குள் ஏதையோ கிளறியது.

பள்ளியில் சில நண்பர்கள் கூறிய ஆபாசமுடன் கூடிய கதைதான் நினைவுக்கு வந்து அவனை உசுப்பவிட்டது. மெல்ல மெல்ல சமையல் கட்டுக்குள் நுழைந்து பின்னால் சென்று அப்படியே லட்சுமியை கட்டியணைத்தான்.

தன்னை உணர்ந்த லட்சுமி பதறியபடியே உதறிவிட்டு அழுது கொண்டே அவனைத் தள்ளினாள். "சீ போடா" என்று கண்ணீர் சிந்திக் கொண்டு வெளியே ஓடினாள். நிலைமையைப் புரிந்து கொண்ட அவன் நடுங்கத் தொடங்கினான். "ஐயோ என்ன காரியம் செய்து விட்டேன்? ... லட்சுமி கூறினால் என் தோலை அப்பா உரித்து எடுத்து விடுவார்?..." அவனுக்கு அப்போது விரிவான யோசனை தோன்றவில்லை. எங்காவது அப்பாவிற்கு தெரியாமல் செல்ல வேண்டும் என்றே தோன்றியது. வீட்டில் சிறிதளவு பணத்தை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக பஸ்சில் ஏறி பட்டணத்திற்கு சென்றான். அங்கு ஒரு பெரிய தொழிற்சாலையில் கூலியாகச் சேர்ந்து தொழிலைக் கற்று, இப்போது தானே ஒரு தொழிச்சாலைக்குச் சொந்தக்காரர் ஆகிவிட்டான். காதல் திருமணம் செய்து ஒரு குழந்தைக்குத் தந்தையுமாகி விட்டான்.

வாழ்க்கை தெளிந்த ஓடையாகப் போய்க்கொண்டிருக்கும் போது திடீரென நினைவு வந்ததும் இந்த பயணம்.

"பாட்டியிருக்கிறாவா?..." அப்பாவிற்கு இன்னும் முன் கோபமா? ல்ட்சுமிக்கு திருமணமாகிவிட்டதா? திருமணமாகிவிட்டது என்றால் யாரை? என்னைப் பார்த்தால் என்ன நினைப்பாள்?' என்ற பலவாறான எண்ணங்களுடன் அவன் தன் வீட்டையடைந்தான்.

பதினைந்து வருடத்திற்கு முன்னிருந்தது போலவே வீடு இருந்தது. தன் வீட்டிலும் டி.வி. ஆண்டனா இருந்ததே ஒரு மாறுதலாக அவனுக்குத் தோன்றியது.

வீட்டின் முன்பு யாரையும் காணவில்லை. மெல்லப் படியேறினான். மனதில் ஒரு படபடப்பு முதலில் சுவரில் மாட்டிருந்த போட்டோ அவனை நிலைகுலையச் செய்தது. அது அவனின் பாட்டியின் போட்டோ சந்தன மாலையுடன் காட்சியளித்தது. கண்கலங்கிய வண்ணம் சற்றுத் தள்ளி மாட்டியிருந்த போட்டோவைப் பார்த்து நிலைகுலைந்தான்.

வாழ்க்கை என்பது வினோதமானது. அதில் சில சம்பவங்கள் எப்படியும் யாராலும் மாற்ற முடியாதவையாகவே அமைந்து விடுகின்றன. சுவரில் அவன் பார்த்த போட்டோ அவன் தந்தையும் லட்சுமியும் மாலைகளோடு மணமக்களாகக் காட்சியளித்ததாகும்.

அவ்வளவுதான். அதைப் பார்த்த மறுவினாடி தன்னை யாரும் பார்த்தார்களா? பார்க்கிறார்களா? என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை தொலைக்காட்சியில் பிரபல நடிகர் ஒருவரின் புகழ்பெற்ற படம் ஓடிக்கொண்டிருந்தது. எல்லாரும் அதன்முன் உட்கார்ந்திருந்தார்களாதலால் அவன் வந்ததை யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை. தன் வீட்டில் மட்டுமல்ல, எந்த வீட்டிலிருந்தும் ஏவரும் அவனைக் கவனிக்கவே இல்லை.

அவன் கால்கள் வந்த வழியே நடையைக் கட்டின.

---

## "ஈழசுதந்திரன்"
## மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டீஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளளலாம் :

நிர்வாகி

"ஈழசுதந்திரன்"

14, சேட் காலனி முதல் தெரு,

மூன்றாம் மாடி,

எழும்பூர், சென்னை-600 008.

---

# பிப்ரவரி தொடக்கத்தில் புலிகள் நடத்திய இரு தாக்குதல்கள்

2-2-97 அன்று பொழுது புலர்வதற்கு முன்பாக மட்டக்களப்புக்கு கிழக்குப் பகுதியின் ஒதுக்குப் புறமாக அமைந்திருக்கும் ஒரு ராணுவப் பிரிவு ஒன்றின் மீது முதல் தாக்குதல் தொடங்கியது. வேறு ஒரு தாக்குதல் வட தீபகற்பகப் பகுதியில் நீண்ட தூர ராணுவப் பதுங்கு குழிமீது நடந்தது. இது குறித்துக் கொழும்பில் இருந்து எமது முகவர் புளோரா பொரஸ்பட் அவர்கள் அனுப்பிய குறிப்பைப் பார்ப்போம்.

பொழுது புலர்வதற்கு முன்பாக மட்டக்களப்புக்குச் சற்று வடக்கே அமைந்துள்ள மாவடிவேம்பு என்ற இடத்தில் அமைந்துள்ள ராணுவ புறச்சாவடி ஒன்றின் மீது சுமார் 200 புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். இந்தத் தாக்குதலில் புலிகள் தன்னேந்தி ஆயுதங்கள், ரக்கேட்டால் செலுத்தப்படும் சினேட் குண்டுகள், மோட்டார்கள் ஆகியவற்றை பயன்படுத்தினார்கள். மாவடி வேம்பில் கிட்டத்தட்ட 100 ராணுவ வீரர்கள் இருந்து வந்தார்கள். சற்று ஏறக்குறைய இரண்டு மணி நேரம் நீடித்த இந்தச் சண்டையில் புலிகளின் தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது என்று ராணுவ அதிகாரிகள் கூறுகிறார்கள். மாவடிவேம்பு அருகில் உள்ள, சித்தாண்டி முகாமின் மீது புலிகள் மாற்றர் குண்டு வீசித் தாக்கினார்கள். பக்கபலமாக மாவடிக்கு துருப்புகள் அனுப்பப்படுவதைத் தடுக்கவே இவ்வாறு தாக்கினார்கள் என்பது தெளிவு.

வடயாழ்தீபகற்பப் பகுதியில் உள்ள வெற்றிலைக்கேணி என்னும் இடந்தில் மற்றொரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. அங்கு ராணுவ பதுங்கு குழி வரிசை மீது புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். 1995 இறுதி வாக்கில் புலிகளிடமிருந்து யாழ்ப்பாண நகரை அரசு படைகள் கைப்பற்றியதிலிருந்து அங்கு தங்கி வருகின்றனர்.

-இவ்வாறு பி.பி.சி. தனது செய்தியில் கூறியுள்ளது.

---

# மார்ச் 27ல் சிறீலங்காவில் உள்ளூராட்சித் தேர்தல்கள்

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர மற்ற எல்லா மாகாணங்க்ளிலும் மார்ச் மாதம் 27-ஆம் நாள் அன்று நகரம் மற்றும் ஊராட்சி மன்றங்களின் தேர்தல்கள் நடைபெறுவுள்ன்து. 1994-ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்த பிறகு அதிபர் சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கு மக்கள் இடையே ஆதரவைச் சோதிக்கும் முதல் சம்பவம் இந்தத் தேர்தலாகத்தான் இருக்கும்.

1995-ஆம் ஆண்டு மே மாதம் ஊராட்சி மன்றப் பதவிக்காலத்தை மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 1996-ஆம் ஆண்டு சிறப்பு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஊராட்சிமன்றத் தேர்தலை ஒத்தி வைத்தார். இவ்வாண்டில் முன்னதாக வட மாகாணத்தில் தேர்தல் நடத்த அரசு ஒரு தேதியை அறிவித்தது. ஆனால் அதற்கு ஆயத்தமாகத் தமக்கு மேல் அதிக கால அவகாசம் வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் கேட்டுக்கொண்டதையடுத்து அந்தத் தேர்தல்களும் ஒத்திப் போடப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



# சுத்தானந்தரின் புத்தமிழ்தம்!

சி. காராளசிங்கம்

(இலங்கை வெளிக்கடைச் சிறையில் சிங்கள இன வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டவரும் 'காந்தீயம்' அமைப்பின் பொதுச்செயலாளருமான டாக்டர் இராசசுந்தரத்தின் மாமனாரான திரு. காராளசிங்கம், இலங்கையின் புகழ் பெற்ற வேளாண் நிபுணர் ஓய்வுபெற்று, தமிழகத்தில் தன் மகள் டாக்டர் சாந்தி இராசசுந்தரத்துடன் தங்கியுள்ள அவரின் நினைவுப் புதையலிலிருந்து.)

சுத்தானந்த பாரதியாரை 1952-ல் யாழ்ப்பாணத்தில் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. அன்று அவர் எனக்கு அன்பளிப்பாக அவருடைய கவிதைகளைக் கொண்ட ஒரு சிறு நூலைக் கொடுத்தார்.

அந்த நூலிலிருந்த சில பாட்டுக்களைப் பார்த்ததும் அதில் எனக்குப் பிடித்த தெய்வீகத் தேவாரமும் திருவருட்பாவும் அவருக்கே படித்துக் காட்டினேன். அவரின் விருப்பப்படி அடுத்து சுத்தானத்த பாரதியாரைச் சந்திக்க நேர்ந்தது. 1958 ல் கொழும்பு வானொலி நிலையத்தில் அவரை நான் இருந்த முகாம் அறைக்கு அடுத்த அறையிலிருந்ததைக் கண்டேன்.

விவசாயப் பிரச்சார சேவையில் ஈடுபட்டு இலங்கையில் பல வட்டாரங்களுக்கும் நான் கடமை காரணமாகச் சென்று வருவது வழக்கம். மாதம் ஒருமுறை விவசாய விஸ்தரிப்பு பிரச்சார வேலையில் ஈடுபட்டு வானொலி மூலமாகத் திட்டம் வகுப்பது, அங்கு வேறு என்னைப் போன்றவர்களுடன் கருத்தரங்கு நடத்துவது வழக்கம். எனது இடது பக்க அறையில் கண்ணாடிக்கூடாக சுவாமி சுந்தானந்தரைக் கண்டேன். அவரைக் காணக் கிடைத்ததும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

உடனே அவருடன் நான் பேச விரும்புவதாக அப்போது அவரைப் பேட்டி கண்டு கொண்டிருந்த அலுவலரிடம் கூறினேன் உடனே அவருடன் பேசியிருந்து பேசக்கூடிய வசதி செய்து கொடுக்கப்பட்டது.

என்னைக் கண்டதும் அவர் அடையாளம் கண்டு பிடிக்கத் திண்டாடியதைக் கண்டு நானே என்னை அறிமுகப் படுத்திக்கொண்டேன். பெயரைக் கேட்டதும் அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்ததுடன் நான் யாழ்ப்பாணத்தில் சந்தித்த போது பாடிய பாட்டு இன்னும் ஞாபகமிருக்கிறதா எனக் கேட்டார். இதை கேட்டுக்கொண்டிருந்த வானொலி நிலைய அலுவலர் அந்தப் பாட்டை பாடச் சொல்ல முடியுமா என்று விளம்பினார். சுத்தானந்தரும் என்னை அதைப் பாடும்படி கேட்டார்.

உடனே நான் பாடத் தொடங்கினேன்.

''பெற்றவள் வெறுத்தால் பிஞ்சிளஞ் செயலுக்குப்
பிறப்புண்டோ பேதை யேன்முக
மற்றவர் வெறுப்பதோ! நீயும்
வஞ்சினன் செய்திடும் கோடிக்
குற்றங்கண்டு பொறுத்தாய் குறை நிறைதேடி!
குளிர்மனக் கருணையினால்
சற்றெனக் காணத் தயவில்லையாகில்
சகத்தினில் எப்படி உய்வேன்?''

அடுத்து அவருடைய இலட்சியங்கள் அடங்கிய விருத்தமொன்று. அதன் முதல் வரியைச் சொன்னதும் மிகவும் உற்சாகத்துடன் அந்தப் பாடலையும் பாடும்படிக் கேட்டார்.

''எளியவர்கள் வயிறார உண்ணவேண்டும்
இறுமாப்பு பேதம் நீங்கவேண்டும்
இடர்செய்யும் சாதிமதம் ஒழியவேண்டும்
எல்லாரும் ஓர்குலமாய் வாழவேண்டும்
வலியவரும் வறுமையிருள் அகலவேண்டும்
அடிமை வார்த்தையே இல்லாமல் எங்கும்
வளமை நிறைந் தோங்கவேண்டும்
மெலியவரும் பிணிதுயர்கள் அகலவேண்டும்
வீரக்கனல் வேண்டும்
விடுதலை வெல்லல் வேண்டும்
வினைவேள்வி வேண்டும்
அசுரபலம் ஒழியவேண்டும்
நலிவுநிலை நீங்கவேண்டும் நாட்டில்
விண்ணரசு தோன்றவேண்டும்
நடமாடு மயிலேறி நலமோங்க வருகவே
ஞானமுகக் கந்தசாமியே''

இந்தப் பாட்டைக் கேட்டதும் ''நான் இந்தப் பாடல்களை மனதிலும் பதிய வெளியிட்டதுமல்லாமல் இப்படி ஒருவர் பாடக்கேட்டு அதன் கருத்துக்களின் அருமையை இன்றுதான் அறிகிறேன்'' என்று கூறி வியந்தார்.

நான் இந்த இரண்டு பாட்டுக்களைப் பாடி முடித்ததும் சுத்தானந்த பாரதியார் அப்படிக் கூறியதும் பதிவுபட்டு உடனடியாக அதை வானொலி மூலம் நாங்கள் கேட்டு அதிசயப்பட்டோம்.

மேற்குறித்த பிரார்த்தனை தேவாரமும் விருத்தமும் எனது பிரச்சார முயற்சிக்கு நான் பல பள்ளிக்கூடங்களில் பாடி விளக்கம் கூறிக்கொள்வது எனது தனிப் பெருமையாயிருந்து வந்தது. ஏனெனில் இந்தப் பாட்டைக் கேள்விப்பட்டதும் விவசாயிகளும் தொழிலாளிகளும் மிகவும் ரசித்தார்கள். பாடி முடிந்ததும் அருமையாகக் கை தட்டி என்னை உற்சாகப்படுத்தினார்கள். இதனால் எனது விவசாய அபிவிருத்தி வேலை மிகவும் சுலபமாக நன்மை தரக்கூடியதை உணர்ந்து அவதார புருடரான சுத்தானந்த பாரதியாரை ஒவ்வொரு பகிரங்கக் கூட்டத்திலும் நான் என் மனதில் பதித்து கொள்வேன்.

அடுத்த முறை இலங்கையில் இவரை நான் கடமை பார்த்துக் கொண்டிருந்த வவுனியாப் பகுதிக்கு வரவழைத்தேன். அவரும் நல்ல மனங்கொண்டு சம்மதித்தார். அங்கு வந்ததும் அங்குள்ள மக்களைக் கூட்டி அவருடைய பேரால் சுத்தானந்தர் மண்டபம் ஒன்று நிறுவப்பட்டது. அது அவருடைய பெயரால் இன்றும் பல சேவைகள் செய்து வருகின்றது.

1980-ம் ஆண்டு அகில உலகத்தமிழ் மகாநாடு மதுரையில் நடந்தபோதும் சுவாமி சுத்தான்ந்த பாரதியாரைச் சந்தித்து உரையாடினேன். அதை நான் இன்றும் ஞாபகத்தில் வைத்துள்ளேன். ஆகையினால் சுத்தானந்தர் தொண்டு அவர் மறைந்து போனாலும் மறக்கமுடியாதது. அவருடைய நோக்கமும் ஊக்குவிப்பும் மக்கள் மத்தியில் என்றும் நிலைப்பதாக!

# மருந்து, மருத்துவர், தாதிகள் பற்றாக்குறையால் அவதி

## முழங்காவில் மக்கள் திண்டாட்டம்

முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சில வாரங்களுக்கு முன் நாளொன்றுக்கு இருநூறாக இருந்த சிகிச்சை பெறும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது நானூறுக்கும் அதிகமாக உள்ளது. அத்துடன் உள் நோயாளர் அனுமதி நாளொன்றுக்கு எண்பதையும் தாண்டுவதாகவும் மொத்த நோயாளர்களில் அரைவாசிப் பேர் மூளை மலேரியா, மலேரியா நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### மலேரியா தாக்கம்

சனவரி மாதம் முதல்திகதி தொடக்கம் எட்டாம் திகதி வரையான ஒரு வாரத்தில் மட்டும 2800 வெளிநோயாளர் சிகிச்சை பெற்றுச் சென்றதாகவும் இதே காலப் பகுதியில் பதினெட்டு பிரசவங்கள் நடந்தேறியதாகவும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் கிளிநொச்சி உருத்திரபுரம் வைத்தியசாலைகளை நாடிய பூநகரி பிரதேச மக்கள் தற்போது மேற்படி வைத்தியசாலையை நாடுவதாலும் மலேரியாவின் தாக்கம் அதிகரித்ததாலுமே இத் தொகை அதிகரிப்பு என்றும் கூறப்படுகிறது.

நாளாந்தம் இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிகள் பற்றாக்குறை நிலவுவதையும் காண முடிகிறது

### வெளிச்சமின்மை

இவ்வேளை மேற்படி வைத்தியசாலையில் வார்டுகள் அமைப்பதற்கென புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இருபது கட்டில்கள் போடக்கூடியதாக அமைக்கப் பட்டுள்ள இக்கட்டிடத்தின் அமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இக்கட்டிடத்தினதும், புதிதாக அமைக்கப் பட்டுள்ள சவச்சாலையினதும் திறப்பு விழா விரைவில் நடைபெறவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை இவ்வைத்தியசாலையில் வெளிச்ச வசதி இல்லாத பிரச்சினை தொடர்ந்து வருவதாகவும் இதை போக்க சமூக தொண்டர் நிறுவனங்களின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# கண்ணிவெடியில் சிக்கி 2 படை வீரர் 3 பேர் சாவு

பொலனறுவை மாவட்டத்தின் கள்ளிச்சபையில் உழவு இயந்திரமொன்று நிலக் கண்ணி வெடியில் சிக்கியதில் உபடை வீரர்களும் பொதுமக்களில் ஒருவரும் கொல்லப்பட்டனர். இரண்டு படைவீரர்கள் காயமடைந்தனர் காயமடைந்தோர் பொலனறுவை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# செய்திச்சரம்

17—1—1997

இலங்கைப் பிரச்சினையில் இத்தியா தலையிடுவது தேவையற்றது. பிரச்சினையைத் தீர்க்க உதவுமாறு இலங்கை அரசும், புலிகளும் இந்தியாவை அழைத்தால் மட்டுமே நாம் யோசனை வழங்கலாம். அகதிகளாக வருவோரை ஏற்று அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் கடமை என்று, கோவையில் நடந்த பாரதிய ஜனதா கட்சி மாநாட்டில் அக் கட்சியின் அகில இந்திய துணைத்தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

(தினமணி)

இலங்கையில் தமிழர்களுக்கும், அரசுக்கும் இடையே உள்ள பிரச்சினையை அரசியல் தீர்வு மூலமே முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று இலங்கை அரசின் சிறு தொழில் மற்றும், கால்நடை வளர்ச்சித்துறை அமைச்சர் தொண்டமான் மதுரையில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

(தினமணி)

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா எந்த விதத்திலும் தலையிடாது என்று, கொழும்பில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குஜ்ரால் கூறியுள்ளார்.

(தினமணி, தினகரன், இந்து)

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வர் கருணாநிதியை இலங்கை வெளியுறவு அமைச்சர் லட்சுமண் கதிர்காமர் சந்திப்பார் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன்)

இராமேசுவரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் சுட்டதில் முனிசாமி (21) என்ற மீனவர் காயமடைந்தார்.

தினமணி)

குறைந்து வரும் சிங்களவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் சிங்கள மக்கள் அதிக குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென அலுவத்த சியரதா வேண்டுகோள் விடுத்துள்ளார்

(தினமணி)

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 80 பொருள்களுக்கு இந்தியாவில் விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வை ரத்து செய்யப்படும் அல்லது குறைக்கப்படும் என்று கொழும்பில் இந்திய-இலங்கை கூட்டுக் கமிஷனின் மூன்றாவது கூட்டத்தில் இந்திய அமைச்சர் குஜ்ரால் அறிவித்துள்ளார்.

(தினமணி, இந்து)

இலங்கை விமானப்படை விமானம் ஒன்று கடலில் விழுந்ததையடுத்து அதிலிருந்த 4 விமான வீரர்களும் இறந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

(தினமணி தினகரன்)
(தினமலர், இந்து)

படிப்பகம்

www.padippakam.com






***யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. *இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.***

**M.S. கேதீஸ்வரன்-மதுரை-1.**

கேள்வி ? ''சமாதானத்திற்காக யுத்தம்'' என்று சிறீலங்கா அதிபர் சந்திரிகா சொல்வதன் பொருள் என்ன?

பதில் : இலங்கையில் இருந்து தமிழ் பேசும் மக்கள் அறவே ஒழிக்கப்பட்டு சிங்களவர்கள் சமாதானமாக வாழும் வரை யுத்தம் நடைபெறும் என்ற பொருளில் இருக்கலாம். ஆனால் தமிழர் பிரச்சினை இல்லையென்றால் சிங்களவர்கள் தமக்குள்ளேயே அடித்துக் கொள்வார்கள் என்பதே வரலாறு சொல்லும் பாடமாகும்.

சந்திரிகாவின் தந்தை சாலமன் பண்டாரநாயகாவே கரையோரச் சிங்களவர்கள் கண்டிச் சிங்களவர்களை அடக்கி ஆள்கிறார்கள் என்று, அதை எதிர்த்துத் தான் அரசியலில் குதித்தார். ஆட்சி பீடம் ஏறிய பிறகோ அது தமிழ், தமிழர் எதிர்ப்பாக மாறி விட்டது. அதன் பிறகு கரையோரச் சிங்களவர்களிடமிருந்த பகையைத் தமிழ் பேசும் மக்கள் மீது காட்டத் தொடங்கி விட்டார்.

வரலாறு சொல்லும் பாடத்தைச் சரிவர உணராத காரணத்தால் சந்திரிகா அவ்விதம் சண்டமாருதம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

**C.R. வைத்தியநாதன்-பூவிருந்தவல்லி**

கே : இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சந்திரிகா வைத்திருக்கும் அதிகாரப் பரவல் திட்டத்தை, ஐக்கிய தேசியக் கட்சி ஏற்க மறுப்பதேன்?

ப : ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் அதே போன்று முயன்றபோது சந்திரிகாவின் தாய்க்கட்சி (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி)யும் அப்படித்தானே நடந்து கொண்டது? சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இவ்விரு சிங்களக் கட்சிகளும் இனப் பிரச்சினை என்ற பெயரில் தமிழர்களைப் பந்தாடி வருவதுதான் அத்தீவின் அரசியலாக உள்ளது.

R. தேனப்பன்-காரைக்குடி.

கே : தமிழர்களின் சுய நிர்ணயக் கோரிக்கையை ஆதரிக்கிறோம். ஆனால் நாட்டுப் பிரிவினையை ஏற்க முடியாது என்று, லங்கா சமசமாஜக் கட்சியினர் கூறுவது எப்படி இருக்கிறது ?

ப : திருமணம் செய்து கொள்ளலாம்; கணவன் மனைவியாய் வாழக் கூடாது என்பது போல !

அ. எதிர்மனசிங்கன்-சென்னை-17.

கே : சந்திரிகாவின் அதிகாரப் பரவல் திட்டமே அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஆனால், அத் திட்டத்தை முதன் முதலில் இலங்கையில் அறிமுகப்படுத்தியது என். எம். பெரேராதான் என்று, லங்கா சமசமாஜக் கட்சியினர் உரிமை கொண்டாடுகின்றனரே?

ப : அதே என். எம். பெரேராதான் திருமதி பண்டார நாயகாவின் முந்தைய கூட்டணி ஆட்சியில் இருந்து கொண்டு மலையகத் தமிழர்களின் வாழ்விடங்களைப் பறிக்கத் துணை போனவர்; யாழ்ப்பாணத்தில் தமிழ் மாநாடு நடத்த இடையூறு செய்தவர் என்பதை தமிழர்களால் எப்படி மறக்க முடியும்? இன்னும், ஒன்று. ல.ச.ச. உட்பட இலங்கையின் இடது சாரிக்கட்சிகள் எல்லாம் தமிழர்களின் ஆதரவைக் கொண்டு தான் வளர்ந்தன. அதே வேளை அவர்கள் ஆட்சியில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் சிங்கள இனவாதத்திற்குத் துணை போனதையும் மறக்க முடியாது. நல்ல வேளை இப்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியிலேனும் தங்கள் கொள்கைப் பிடிப்பைக் காட்டுவது மகிழ்ச்சி தருகிறது.

எஸ். மதியழகன்-வத்தலக்குண்டு.

கே : நான் இங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறேன். அணமையில் நடந்த இந்திய சுதந்திர தினத்திற்கு முதல் நாள் எங்கள் ஆசிரியர் ' எல்லோரும் நாளை சுதந்திரதின விழாவில் கலந்து கொள்ள காலை 8 மணிக்கெல்லாம் வந்து விட வேண்டும்'' என்றார். நான் எழுந்து ''இலங்கை அகதி மாணவர்களாகிய நாங்களுமா ?'' என்றேன் அதற்கு ஆசிரியர் ''ஏன்; நீங்கள் இப்போது இந்தியாவில்தானே இருக்கிறீர்கள்! அதனால் கலந்து கொள்ளத்தான் வேண்டும்'' என்றார். அதற்கு நான் ''இலங்கையில் தமிழர்களாகிய நாங்கள் சுதந்திரமாக வாழ முடியவில்லை. அதனால்தான் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கிறோம். என்றாலும் சுதந்திரம் கிடைக்காத எமது பகுதியில் (இராணுவம் இல்லாத பகுதியில்) ஒரு பெண் எங்கு வேண்டுமானாலும் தனியாகச் சென்று பத்திரமாகத் திரும்பி வரக் கூடிய நிலை இருக்கிறது. இங்கு இந்தியாவில் அந்த நிலை இருக்கிறதா ?'' என்று கேட்டேன். அந்த ஆசிரியப் பெண்மணி மட்டுமல்ல, சக மாணவ மாணவியரும்கூட உடன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். நான் இப்படிக் கேட்டது சரியா ?

ப : உயிரைப் பறி கொடுத்து விடுவோம் என்று பயந்து ஓடி வந்து விட்டு, உடைமையைப் பறி கொடுப்பது பற்றிப் பரிதாபப் படுவது எப்படிச் சரியாகும்? பெண்ணுரிமை-பாதுகாப்பு என்பது இந்தியாவில் மட்டுமல்ல, இன்னும் பல நாடுகளில் இருந்து வரும் ஒரு உலகப் பிரச்சினை. இதை நாட்டு விடுதலையோடு போட்டுக் குழப்பக்கூடாது.

(இவர் இன்னும் சில கேள்விகளையும் கேட்டுள்ளார். ஆனால் அவை ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழக நிர்வாகம் தொடர்புடையவை. அவற்றை அதன் செயலாளருக்கு எழுதிக் கேட்பதுதான் சரியாக இருக்கும். அப்துல் காதரிடம் அமாவாசை பூஜை பற்றிக் கேட்டால் எப்படி ?

-குயுக்தியார்.)

ஜெ. மார்த்தாண்டன்-குளச்சல்

கே : உலகம் பூராவும் சிதறியுள்ள தமிழர்கள் மீண்டும் ஈழத்திற்குத் திரும்புவார்களா ?

ப : ஏன்; அவர்கள் திரும்பாவிட்டால் எல்லாவற்றையும் சொந்தமாக்கி விடலாம் என்ற திட்டமா ? ஈழம் மலர்ந்தால், ஈழத்தவர்கள் எல்லாரும் வருவார்கள். சந்தேகம் வேண்டாம் !

E.K மணவாளன்-தேனி

*கே : ''வெறும் விடுதலைப் போராளிகளாக உள்ள போதே சிங்கள ராணுவத்தைப் பந்தாடும் தமிழர்கள், தனி ஈழம் கொடுத்தால் எங்களை நிம்மதியாக வாழ விடுவார்களா ? அதனால்தான் சிங்கள மக்கள் எதிர்க்கிறோம்'' என்று என் சிங்கள நண்பர் எனக்குக் கடிதம் எழுதியுள்ளார் அவர் சொல்வது சரியா ?

ப : தவறு. தமிழர்களைப் போராளிகளாக உருவாக்கியதே சிங்கள இனவாதம் தான். ஒரே நாட்டில் ஒன்று ஆளுகிற இனமாகவும், மற்றது ஆளப்படுகிற இனமாகவும் இருப்பதால் வந்த விளைவு இது; இரண்டும் அவரவர் பகுதிகளில் ஆளும், இனமாக மாறி விட்டால் பூசலுக்கு இடமிருக்காது. அப்போது அண்டை நாட்டு நண்பர்களாக நன்றாக உறவாட முடியும்.

**'ஈழசுதந்திரன்'-உரிமை விளக்கம்**
**(படிவம் 4 விதி 8 காண்க)**

| | | |
|---|---|---|
| வெளியிடும் இடம் | : | 14, சேட் குடியிருப்பு, முதல் தெரு, (3ம் மாடி) எழும்பூர் சென்னை-600 008. |
| வெளியிடும் காலம் | : | மாதம் ஒரு முறை |
| வெளியிடுபவர் & அச்சிடுபவர் பெயர் | : | அருணாசலம் கோபாலன் |
| (இந்தியக்குடிமகனா ?) | : | ஆம் |
| முகவரி | : | 14, சேட்குடியிருப்பு, முதல்தெரு (3ம் மாடி) எழும்பூர், சென்னை-8. |
| ஒரு விழுக்காட்டுக்கு மேல் முதலீடு செய்துள்ள பத்திரிகையின் பங்குதாரர் மற்றும் உரிமையாளர் பெயரும் முகவரியும் | : | அருணாசலம் கோபாலன் 14, சேட்குடியிருப்பு, முதல் தெரு, (மூன்றாம் மாடி) எழும்பூர், சென்னை-8. |

அருணாசலம் கோபாலன் ஆகிய நான் என் அறிவுக்கும் உணர்வுக்கும் தெரிந்தவரை மேலே காணும் விவரங்கள் யாவும் உண்மை என்று உறுதி கூறுகிறேன்.

25-2-1997
சென்னை

(ஒப்பம்)
அருணாசலம் கோபாலன்

ராணுவத்தால்

# காணாமலடிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க ராணுவ விசாரணைக் குழுவா?

### பரராசசிங்கம் எழுப்பும் வினா

பொலிசாரால் அல்லது ராணுவத்தினரால் காவலில் வைக்கப்பட்டு அவ்வப்போது காணாமல் போனவர்கள், உறவினர்கள், மற்றும் நண்பர்கள் வழங்கும் சாட்சியத்தைப் பதிவு செய்ய தற்போது ராணுவ விசாரணைக் குழு யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறது. தமிழ்ப் புலிகளிடமிருந்து இலங்கை அரசு படைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குப் பிறகு நடந்ததாகத் தெரிவிக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து மட்டுமே இக்குழு விசாரணை நடத்தும் என்று பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறுகிறார்கள். அது தொடக்கம் மிகப் பலர் திடீரெனக் காணாமல் போனார்கள் என்று தமிழ் பொது மக்களிடம் இருந்தும் மனித உரிமைக்குழு அமைப்புகளிடம் இருந்தும் புகார்கள் வந்துள்ளன.

**செயல்படுத்தாத உத்தரவாதம்**

கைது செய்யப்பட்டவர்கள் உண்மையிலேயே எப்போதாவது கைது செய்யப்பட்டார்களா என்பதையும், அப்படிக் கைது செய்திருந்தால் அதற்கான சட்ட ரீதியான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டனவா என்பதையும் இக்குழுக்கள் கண்டறியும் என்று பாதுகாப்புத்துறை சார்பாகப் பேசிய ஒருவர் கூறினார். யாழ்ப்பாணத்தில் காவலில் வைக்கப்பட்ட தமிழர்களின் நிலைமை பற்றி மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் பெரும் கவலை தெரிவிக்கப் பட்டிருந்தது. கைது மற்றும் காவலில் வைக்கப்பட்ட சம்பவங்களில் பெரும்பாலான சம்பவங்களில் அப்படி சில நடந்தன என்றே ஒப்புக்கொள்ள்ளவில்லை என்றும், பல சம்பவங்கள் நடைபெறவே இல்லை என்றும் ஒரேயடியாக மறுக்கப்படுகின்றது என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது. அவ்வாறு கைது செய்யப்படும்போது, உறவினர்களுக்கு எழுத்து மூலமாகத் தகவல் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்த உத்தரவாதங்கள் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

**பரராஜசிங்கம்**

இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் காணாமல் போனவர்கள் பட்டியல் ஒன்றினை ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். காணாமல் போனவர்களைப் பற்றி விசாரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை நியமனம் செய்திருப்பதைக் கண்டனம் செய்துள்ளார் பாதுகாப்புப் படைகள் குறித்த குற்றங்களை அக்குழு மறைக்காதா? என அவர் வாதிடுகிறார். இருப்பினும் குற்றச்சாட்டுக்கள் தீர விசாரிக்கப்படும் என்று அரசு உறுதியளித்துள்ளது ஆனால் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போய் இருக்கின்றார்கள் என்று வரும் தகவல்கள் பெரிதும் மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் என்றும் அரசு கூறுகின்றது.

--பி.பி.சி. தனது ஒலிபரப்பில்

# விஜேவீரவின் மனைவியும் பிள்ளைகளும் லண்டன் செல்லலாம்

மறைந்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹண விஜேவீரவின் மனைவியான சித்திராங்கனி விஜேவீரவும் அவரது 4 குழந்தைகளும் அவரின் சகோதரரான டாக்டர் சந்திரா பெர்ணாண்டோவிடம் ஒப்படைக்கப்பட விருக்கின்றனர்.

தற்போது சித்திராங்கனியும் அவரது குழந்தைகளும் திருகோணமலையில் உள்ள கடற்படைத் தலைமையகத்திலேயே வசித்து வருகின்னர்.

லண்டனில் வசித்துவரும் பெர்னாண்டோ அண்மையில் சித்திரங்கனியை திருமலை சென்று சந்தித்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தமிழர் பிரச்னையில் மத்திய-மாநில அரசுகளின் கண்டுகொள்ளா நிலை மாற வேண்டும்!

- கேயார் -

இலங்கைப் பிரச்சனைக்கு சமாதான முறையில் தீர்வு காணப்படும் என்று இலங்கை அதிபர் சந்திரிகா குமாரண துங்க கூறிக் கொண்டே பதவியில் ஏறி அமர்ந்து கொண்டவர்.

பதவியேற்று இரண்டு வருட காலம் முடிவடையும் நிலையிலும் கூட சமாதானம், சமாதானம் என்றே பேசி வருகிறார். ஆனால் அவருடைய சங்கேத மொழியில் போர் என்பதற்கு சமாதானம் என்றே பொருள் போலும்!

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதும் அவரது தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் சொன்னது ஒன்று செய்வது வேறொன்று.

## யாழ்ப்பாணத்தில் வெற்றியா?

யாழ்ப்பாணத்தை பிடித்துக் கொண்டதாக இராணுவம் வெளியுலகிற்கு காட்டிக்கொண்ட போதிலும் இன்றும் அங்கே மோதல் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

இதே போல்தான் கிளிநொச்சி வவுனியா, மன்னார் பகுதிகளிலும் இராணுவம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்க வில்லை.

காரணம் யாழ்ப்பாண வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்த நேரத்தில்தான் முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை மட்டுமல்ல விலைமதிக்க முடியாத ஆயுதங்களையும் அரசு இழந்துள்ளது.

இதனை ஜீரணிப்பதற்குள் பரந்தனில் உள்ள படையினர் முகாம் மீதும் விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் பெரும் மதிப்பு மிக்க ஆயுதங்களை இலங்கை அரசு இழந்து விட்டது.

## மன்னாரில் படை பெருப்பு

இந்த நிலையில் தற்போது மன்னாரில் உள்ள இராணுவ முகாம்கள் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் எனக் கருதி மன்னார் வீதியில் படையினர் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு தரை மார்க்க விநியோகப் பாதையை திறப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக இராணுவத்தினர் மும்முனைத் தாக்குதல் ஒன்றை நடத்தும் முஸ்தீபுகளில் இறங்கி இருக்கின்றனர்.

இதன் முதற்கட்டமாக வவுனியா மன்னார் வீதியில் பூவரசங்குளம் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் படையினர் குவிக்கப்பட்டு படை நகர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் காரணமாக வவுனியா தாண்டிக்குளம் ஊடாக வடக்கு நோக்கி வன்னிப் பகுதிக்கு உணவு லொறிகள் செல்வதும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

## அகதிகளை கண்டு கொள்ளகூடாதா?

இந்த நிலையில் வட பகுதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி அதன் மூலம் ஒரு (போலி) வெற்றிக்கனியை எட்டிப் பறிக்கலாம் என அரசாங்கம் கங்கணம் கட்டிக் களத்தில் இறங்கியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு ஏனைய தமிழ்க் கட்சிகளும் களத்தில் இறங்கியுள்ளன. உள்ளூராட்சி தேர்தல் நடத்துவதற்கு அங்கு அமைதி திரும்பி விட்டதாக நினைக்கும் அரசாங்கம் பசி பட்டினியால் அகதிகளாக தமிழ்நாடு நோக்கி ஓடிவரும் மக்களைச் சிந்தித்துப் பார்க்கவில்லை.

ஈழத்துப் பிரச்சினையில் இந்திய மத்திய அரசாங்கம் தொடர்ந்து மௌனம் கடைப்பிடிப்பதும் மத்திய அரசின் நிலை தான் மாநில அரசின் நிலை என்று தமிழ்நாடு அரசு கூறிக் கொள்வதும் ஈழத்தமிழர்கள் நிரந்தர அகதிகள் என்றும், அவர்களுக்கு எதிர்காலமே கிடையாது என்றும் சொல்லாமல் சொல்லப் படுவதாய் உணரப்படுகிறது.

## இந்திய மனம் இளகட்டும்

இந்திய-இலங்கை உறவினை மேம்படுத்துவதற்காகவும், வர்த்தக மேம்பாட்டினைச் சீர் செய்து கொள்வதற்காகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் அவர்களின் இலங்கைப்பயணம் அமைந்துள்ளது. இந்தியா மூலம் ஈழத்துப் பிரச்சனை தீர்க்கப்படும் என்ற வாக்குறுதி-குஜ்ரால் சந்திரிகா சந்திப்பின் பின் நீண்ட காலத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளது என்பதையும் உணரக் கூடியதாக இருக்கிறது.

அழிவது இரண்டு தரப்பிலும் உயிர்கள் என்பதை மட்டும் மறந்து விடக்கூடாது. மனித நேயம் என்பது மதிக்கப்பட வேண்டியது. அதற்கு ஆபத்து எத்தரப்பில் இருந்து தோன்றினாலும் அதை தடுக்க வேண்டியது இந்தியா போன்ற பெரிய நாட்டின் தார்மீகப் பொறுப்பாகும்.

அப்படியிருக்க, இந்திய மத்திய அரசு கொண்டுள்ள ''ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் கண்டு கொள்ளா நிலை'' மாற்றப்பட வேண்டும். இதே போல் மாநில அரசின் நிலையிலும் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

---

# வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியருக்கு,

ஈழத்தமிழ் மக்கள் மற்றும் தமிழ் இயக்கங்களிடையே ஒற்றுமையையும், ஒட்டு மொத்தக் கருத்தையும் வலியுறுத்தி சந்திரகாசன் அவர்கள் விடுத்திருந்த அறிக்கை உண்மைகளின் வெளிப்பாடு. உணர்வு பூர்வமானது. உடனே சம்பந்தப்பட்டோர் எற்கத் தக்க ஏற்றம் கொண்டது.

மா. தாமஸ், ஆவடி.

குஜ்ராலின் இலங்கை விஜயத்தை ஒட்டி எழுதியிருந்த ஆசிரியத் தலையங்கம் அருமை. ''ஈழத் தமிழினத்தின் இன்னலுக்கு முடிவுகட்ட இந்தியாவை நிர்ப்பந்தித்து ஏற்றன புரிய வேண்டும்'' என்று தமிழக முதல்வரை வேண்டி முடித்திருந்த விதம் பாராட்டுக்குரியது

கே. கே. ஆதவன், அரியலூர்.

இலங்கை அகதிகளை இந்தியாவில் தூஷணம் செய்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் கேட்கப்பட்டிருந்த கேள்விக்கு குயுக்தியார் அளித்திருந்த பதில் அட்சர லட்சம் பெறும்.

மா. உடையப்பன், புதுக்கோட்டை.

எஸ். நிர்மலாவின் ''விடியலைத்தேடி'' சிறுகதை சிறப்பாக இருந்தது. மடல்வழிச் செய்திகள் மனதைத் தொட்டன.

வி. சிறீஸ்கந்தா, மதுரை-4.

''பழைய கதை, பழைய பாத்திரங்கள், பழையநாடகம், -ர்வையாளர்கள் யார்?'' என்ற கேயாரின் கட்டுரை இயல் -பாக இருந்தது ஆனால் அந்த நாடகம் எப்போது முடியும் -ன்று தெரியவில்லையே! 'ஈதலும் யாசகமும் வள்ளுவர் -ரண்படுகிறாரோ?-அருகோவின் குறள் பற்றிய அலசல் -ிந்திக்க வைக்கிறது.

டா. க. மணியரசன், கோவை-3.

---

### யுத்தம் முடிவுக்கு வந்து

# அமைதி வாழ்வு ஆரம்பமாக பிரார்த்திக்கிறோம்

–பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ

யுத்தம் முடிவுக்கு வந்து அமைதியான வாழ்க்கை ஆரம்பமாவதற்கு சமாதானத்தின் இளவரசரும் வரலாற்றின் நாயகனும் துணை புரிய வேண்டுமென கிறிஸ்தவர்களாகிய நாம் பிரார்த்திக்கிறோம் என கொழும்பு பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ விடுத்துள்ள சுதந்திர தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

செய்தியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இன, மத ரீதியான உணர்வுகள் குறித்த புரிந்துணர்வற்றும் மொழி, கலாசார வேறுபாடுகளுடன் தனிமனித சுதந்திரம், சமஉரிமை. சகோதரத்துவம் தொடர்பாக கண்மூடித்தனமாகவும் பல வருடங்களாக நாம் இருந்து வருகிறோம். இந்த அடிப்படை மனித தேவைகளை நாம் தேர்ந்தெடுத்தே புறக்கணித்து எமது மன முதிர்ச்சியின்மைக்கு நாம் அடிமைகளாகவுள்ளோம்.

வேற்றுமையில் ஒற்றுமையே இன்று உலகுக்கு

(12-ம் பக்கம் பார்க்க)

---




## காசுகொடுத்தாலே பாஸ்

உன்னாணையாச்சொல்லுறன் மோனை, எனக்கு இப்ப கடிதங்கள் வாறது குறைந்து போச்சு.

ஏனெண்டு கேட்கிறியே! பல பேருக்கு போன கடிதங்கள் உரிய முறையில் போய்ச் சேருறதில்லையாம்.

தமிழ் தெரியாத பச்சை உடுப்புக்காரர் பல கடிதங்களை உடைச்சு அறைகுறைத் 'தமிழில்'' அதுவும் எங்கடையாட்களின்ர உதவியோட படிச்சுப்போட்டு அவைக்கு விருப்பம் எண்டால் அனுப்புவினமாம் இல்லையெண்டால் அம்போதான்.

நிலமை உப்பிடி இருக்கேக்கை எப்படி மோனை கடிதம் வரும்?

இன்னுமொண்டையும் சொல்லுறன் கேளும். யாழ்ப்பாணத்துக்குள்ள நடக்கிற செய்திகளை உடனுக்குடன் செய்தியாக வெளியிடும் ஒரேயொரு பத்திரிகையாக ''உதயன்'' பத்திரிகை யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. இராணுவத்தினர் அவையள் மேலேயும் ஒரு கண் வைச்சிருக்கினமாம், அந்த பேப்பரின்ற ஆசிரியரையும் விசாரணக்கு இராணுவம் அழைத்ததாகவும், செய்திகளைப் போடும்போது தங்களிடம் கேட்டுப் போட்டு போடச் சொன்னவையாம். எப்பிடி இருக்குது...

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி மக்கள் இராணுவ நிலைகள், தொடர் சோதனைகள் காரணமாகஇருக்கமுடியாமல் கொழும்புக்கோ, இல்லை வெளிநாடுக்கோ போய்ச் சேர்ந்திடலாம் எண்டு ஓடோடி வந்தாலும் வவுனியாவில விடமாட்டினமாம்.

அதுவும் பாஸ் கொடுப்பதற்கு ஒரு ரேட் போடப்பட்டுள்ளதாம் எவ்வளவு தெரியுமோ தம்பி 30 ஆயிரம் ரூபாய்.

ஐக்கிய இலங்கை எண்டு பேசுற ஆட்கள்தான் இந்த 'ரேட்' பேசியினமாம்

தடுக்கி விழுந்தவன் மேல் மாடு ஏறி மிதிக்கிறகதை மாதிரி யாழ்ப்பாணத்தில் மருத்துவர்கள் மற்றும் மருந்து தட்டுப்பாடு நிலவும் இந்தக் காலகட்டங்களில் போலி மருத்துவர்கள் திடீர் திடீரென முளைத்துள்ளதாகவும், பெரும்பாலாக இப்படியா மருத்துவர்களிடம் செல்லும் நோயாளிகள் நோய் மாறுவதற்குப் பதிலாக அதிகப்படியான விளைவுகளைச் சந்திப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

படிப்பகம்

# ஒரு குறளை உணர்வோம்

-: அருகோ :-

## புகழீட்ட முடியாதா? புகாதே எதிலும்!

''தோன்றின் புகழொடு தோன்றுக ! அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

திருக்குறள் : 236

பரிமேலழகர் : தோன்றின் புகழொடு தோன்றுக-மக்க ளாய்ப் பிறக்கின் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று-அக்குண மில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று என்றவாறு.

'புகழ்' ஈண்டு ஆகு பெயர். 'அஃதிலார்' என்றமையின் மக்களாய் என்பதூஉம், மக்களாய்ப் பிறவாமை என்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தல் என்பதூஉம், பெற்றாம், இகழ்வார் இன்மையின் 'நன்று' என்றார்.

மணக்குடவர் : பிறந்தால் புகழுண்டாகப் பிறக்க; அஃது இலார் பிறக்குமதின் பிறவாமை நன்று என்றவாறு.

இது, புகழ்பட வாழவேண்டும் என்றது.

பரிதியார் : பிறந்தால் புகழுடனே வாழ வேணும்; அந்த நெறியிலாதார் பிறப்பதில் பிறவாமலிருப்பதே நன்று.

காளிங்கர் : ஒருவர் தம் புகழ் பரப்புவதாகப் பழியினை நீக்கிப்புகழ் பெறுதலே தோற்றமாவது; அஃதிலார் நானிலத் தின் கண் தாம் ஒரு மக்கள் உருவுகொண்டு தோன்றுதலின் இறந்து படுதலே பெரிதும் நன்மையுடைத்து என்றவாறு.

டாக்டர் மு.வ.: ஒரு துறையில் முற்பட்டுத் தோன்று வதனால் புகழோடு தோன்ற வேண்டும்; அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்கு தோன்றுவதை விடத் தோன்றாம விருப்பது நல்லது.

பழைய உரையாசிரியர்களில் இக்குறட்பாவைபொறுத்த வரை காளிங்களின் உரையே வள்ளுவரின் உள்ளத்தை நெருங்கி வந்து சொல்லுவதாக உள்ளது. ஏனெனில் மக்க ளாய்ப் பிறப்பதும், விலங்குகளாய்ப் பிறப்பதும், பிறவாம லிருப்பதும் பிறப்பவனுடைய கையில் இல்லை.

''மக்களாய்ப் பிறவாமை என்ற அருத்தா பத்தியான் விலங்காய்ப் பிறத்தல் என்பதூஉம் பெற்றாம்'' என்று பரிமேலழகர் சொல்வது, புராணங்கள் கூறும் 'பிறவிக் கொள்கையை' இக்குறட்பாவில் வலிந்து திணிப்பதாகவே உள்ளது. (அருத்தாபத்தி-சொல்லிய ஒன்றைக் கொண்டு சொல்லாத ஒன்றை அறிதல்.)

காளிங்கரின் நெருக்கத்தை மேலும் வலிவுடையதாக்கி ''ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பு இல்லாதார் அங்குத் தோன்றுவதை விடத் தோன்றாமலிருப்பது நல்லது'' என்று ஓரளவுக்கு உண்மைப் பொருள் கூறியிருக்கிறார் டாக்டர் மு. வ.

ஆனால், தோன்றும்பொழுதே புகழோடு தோன்றவேண் டும் என்று கூறுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. தோன்றியவுடன் புகழைத் தோற்றுவிக்க வேண்டும் என்பது தான் சரியாகும்.

மனிதர்கள் எல்லாரும் ஒன்றுதான். பொதுவான மனித னிலிருந்து தான் உழவன், வணிகன், ஆசிரியன், கவிஞன், கலைஞன், மருத்துவன், அரசியல்வாதி, நிர்வாகி, பொறி யாளன், விஞ்ஞானி, ஞானி முதலிய பல்துறைத் தோற்ற மும் கொண்டோர் உருவாகின்றனர். அப்படி உருவா கின்றவர்கள் புகழையும் உருவாக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் உள்ளக்கிடக்கை.

ஏன்?

அப்படிப் புகழ்பெற வேண்டும் என்கிற வெறியுடையவர் கள்தான் புதியன படைப்பார்கள். ஆக்கம் தராததைப் போக்கி ஒழிப்பார்கள். மற்றவர்கள் 'பத்தோடு பதினொன்று அத்தோடு நானுமொன்று' என்றுதான் நாளைக் கழித்து விட்டுப் போவார்கள். அத்தகையோரால் நானிலத்திற்கு என்ன பயன் ?

எடுத்துக்காட்டாக தலைவர்கள் காலந்தோறும் தோன்றுகிறார்கள். ஆனால் பெண் விடுதலை, மண் விடு தலை, அடிமைத் தளைகளிலிருந்து விடுதலையளித்து உரிமை வாழ்வை மக்களினத்திற்கு உருவாக்கிக் கொடுத் திருப்பவர்கள் எத்தனை பேர் ? அப்படி உருவாக்கிக் கொடுக்கும் வல்லமையிலாதார் தலைமைப் பதவிக்கு வராமல் இருப்பதே மேல் என்கிறது குறட்பா.

ஆக, ''ஏ மனிதா ! நீ எந்தத்துறையில் வேண்டுமானா லும் நுழைவதற்கு உனக்கு உரிமையிருக்கிறது. ஆனால் உன்னால் அந்தத் துறைக்கே புகழ் ஏற்பட வேண்டும் அந்தப் புகழால் இந்த உலகம் மேம்பட வேண்டும். முடியாது எனில் நீ அந்தத் துறையில் நுழையாமல் இருப் பதே, அதாவது தோன்றாமலிருப்பதே நல்லதாகும்'' என்கி றார் இக் குறட்பா மூலம் வள்ளுவர்.

# தென்னிலங்கை மீனவர்கள் கல்முனை கடலில் அட்டகாசம்

### முஸ்லிம்களின் மீன்பிடி வலைகள் அபகரிப்பு

கல்முனை மீனவர்களுக்கு சொந்தமான பல லட்ச ரூபா பெறுமதியான வலைகள் இர வில் நடுக்கடலில் வைத்து தென்னிலங்கை மீனவர்கள் பலரால் அபகரித்துச் செல்லப் பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை பொலிசில்முறை யிடப்பட்டுள்ளது.

மாளிகைக்காடு கிராமத் தைச் சேர்ந்த அஹமட் லெவ்வை என்பவரது 10லட்ச ரூபாவுக்கு மேல் பெறுமதி யான மீன்பிடி வலைகளும் அஹமட் மஜீத் என்பவரின் இரண்டரை லட்ச ரூபா பெறு மதியான மீன்பிடி வலைகளும் களவாடப்பட்டிருப்பதாக பொலிசில் முறையிடப்பட்டுள் ளது. வேறு பலரின் வலை களும் அபகரித்துச் செல்லப் பட்டுள்ளன.

மாத்தறை, கிரிந்த பகுதி களில் இருந்து அதிவேக டிங்கி மீன்பிடி படகுகளில் வந்த சிங்கள மீனவர்கள் நள்ளிரவு வேளையில் பலாத்காரமான முறையில் அபகரித்துச் சென் றதாக கல்முனை பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

கல்முனை கடற்கரையிலி ருந்து பிற்பகலில் இயந்திரப் படகுகளில் புறப்படும் முஸ் லிம் மீனவர்கள் சுமார் 75 மைல் தொலைவுக்கு சென்று நள்ளிரவு வேளையில் ஆழ் கடலில் வலைகளை கட்டுவது வழக்கமாகும்.

அதன்பின்னர் இம்மீனவர் கள் சில மணி நேரம் மீனுக் காக காத்திருக்க வேண்டும்.

இத்தருணத்திலேயே திடீ ரென அங்கு வந்த தென் லங்கை மீனவர் கோஷ்டி வலைகளை அறுத்து அபகரித் துச்சென்றதாக முறையிடப் பட்டுள்ளது.

முன்னரும் இத்தகைய சம்பவங்கள் நடுக்கடலில் வைத்து இடம்பெற்றதாக கல் முனை மீனவர்கள் கூறினர்.

வலைகள் அபகரிக்கப் படுவதை தடுக்க முற்பட்ட முஸ்லிம் மீனவர்கள் தென் னிலங்கை மீனவர்களினால் தாக்கப்பட்டும் உள்ளனர்.

தென்னிலங்கையில் இருந்து அதிகவேக படகு களில் பெருமளவு மீனவர்கள் கிழக்கு கடலுக்கு வந்து இவ் வாறு அட்டகாசத்தில ஈடுபடு வதால் கல்முனை மீனவர்கள் இனிமேல் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்வது ஆபத்தான காரியமாகி உள்ளது.

தென்னிலங்கை மீனவர் கள் கத்தி போன்ற கூரிய ஆயுதங்களையும் தம்வசம் வைத்திருப்பதாக கல்முனை மீனவர்கள் கூறுகின்றனர்.

நோன்பு வேளையில் கட லுக்குச் சென்றபோது இத் தகைய சம்பவம் நடந்திருப் பது வேதனைக்குரியதென மீனவர்கள் கூறுகின்றனர்.

முன்னர் இடம் பெற்ற இதுபோன்ற சம்பவங்கள் குறித்து கடற்றொழில் நீரியல் வள அமைச்சரிடம் பல தடவை முறையிடப்பட்டும் எந்தப் பலனும் ஏற்பட வில்லை.

## மடல் வழிச் செய்தி-2

யாழ்ப்பாணத்தில் இருந்து பத்மன் என்பவர் சென்னை யில் உள்ள ஒருவருக்கு எழுதிய கடிதம்.

இப்போதும் அகதிகள் இந்தியாவுக்குப் போவதாக பேப்பரில் பார்த்தோம். இங்கு ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல். எப்., ரெலோ எல்லாம் வந்திருக்கிறார்கள். ஆமி அடிக்கடி 'சென்றி' போட்டு கொண்டு இருக்கிறார்கள். சிங்களம் கதைத்தால் அவர்களுக்கு மிகவும் சந்தோஷம். ஏதோ காலம் ஒரு மாதிரிப் போய்க் கொண்டிருக்கிறது. 'ரவுணுக் குள்' அவ்வளவு பிரச்சனை இல்லை. கிராமங்களில் தான் கஷ்டம்.

இக்கடிதம் 3-1-97 எழுதப்பட்டது.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையானது. ஆகவே நாம் இந்த வேற்றுமையில் ஒற் றுமை என்ற தன்மையே நாட்டைக் கட்டியெழுப்பும் காரணியாக பங்களிப்பு வழங் குவதற்கு இடமளித்து சிங்கள தமிழ் முஸ்லிம், பர்கர் ஆகிய சகல பிரஜைகளும் இலங்கை யர் என்ற அடையாளத்துடன் பங்குகொள்வதற்கு பாடுபடு வோமாக.

கொழும்பு ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோ வெளியிட்டுள்ள சுதந்திரதின செய்தியில், நாடு சுதந்திர மடைந்து 50 ஆண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கி றோம். ஆனால் இந்த 50 ஆண்டுகளிலும் தொடர்ச்சி யான பல போராட்டங்களை எதிர்கொண்டுள்ளோம்.

வேறுபட்ட இனங்களின், மதங்களின் போராட்டங்கள் வறுமையை வெற்றிகொள்ளும் போராட்டம் நாகரிக சமூகத் திற்கு அச்சுறுத்தலாக விருப் பதை வெற்றி கொள்ளும் போராட்டம், என்பவையே இவையாகும். இப்போராட்டம் இடம்பெற்றாலும் மெதுவாக ஆனால் நிச்சயமாக நாம் முன்னேற்றப்பாதையில் செல் வோமென்பது நிச்சயம்.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Salt Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Chennai-600008.
Printed at Kuralnery Achagam, Chennai-94.

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை